winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## செப்டம்பர் 2022

செப்டம்பர் 22-30

**1. IHCI என்ற உயர் இரத்தவழுத்தக் கட்டுப்பாட்டு முனைவு தொடங்கப்பட்ட நாடு எது?**

அ. அமெரிக்கா

**ஆ. இந்தியா ☑**

இ. இந்தோனேசியா

ஈ. வங்காளதேசம்



✓ தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ் இந்திய உயர் இரத்தவழுத்தக் கட்டுப்பாட்டு முனைவுமூலம் மேற்கொள்ளப்படும் பேரளவிலான திட்டத்திற்காக இந்தியாவிற்கு ஐக்கிய நாடுகள் விருது கிடைத்துள்ளது. 'இந்திய உயர் இரத்தவழுத்த கட்டுப்பாட்டு முனைவு' என்பது இந்தியாவின் தேசிய சுகாதாரத் திட்டத்தின்கீழ் செயலில் இருக்கும் ஒரு முனைவு ஆகும். இது நடுவண் சுகாதார அமைச்சகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR), மாநில அரசுகள் மற்றும் உலக சுகாதார நிறுவனம்–இந்தியா ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியாகும்.

**2. 'குற்றவியல் நடைமுறை (அடையாளம்)' மசோதாவுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

**ஆ. உள்துறை அமைச்சகம் ☑**

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

✓ விசாரணைக் காவலர்கள் கைதிகளின் பயோமெட்ரிக் விவரங்களைச் சேகரிக்க உதவும் குற்றவியல் நடைமுறை (அடையாளம்) மசோதா, 2022–ஐ நடுவணரசு அறிவித்துள்ளது. இந்தச் சட்டம், 2022 ஏப்ரலில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. ஒரு குற்றத்தின் விசாரணையின்போது ஒரு நபரின் அளவீடுகள் அல்லது நிழற்படங்களை ஆவணப்படுத்த உத்தரவிட இந்தச் சட்டம் ஒரு நீதியரசருக்கு அதிகாரமளிக்கிறது.

**3. சமூக பங்குச் சந்தைக்கான விரிவான கட்டமைப்பை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ. RBI

**ஆ. SEBI ☑**

இ. NITI ஆயோக்

ஈ. நடுவண் நிதியமைச்சகம்

✓ இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (SEBI) சமூக பங்குச்சந்தைக்கான விரிவான கட்டமைப்பை வெளியிட்டுள்ளது. இது ஒரு இலாபநோக்கற்ற நிறுவனத்திற்கான பதிவு மற்றும் ஆவணங்களை வெளிப்படுத்தல் தேவைகளுக்கான குறைந்தபட்சத் தேவைகளைக் குறிப்பிடுகிறது. மூலதனச் சந்தை ஒழுங்குமுறை அமைப்பான SEBI, சமூக பங்குச்சந்தைக்கான விதிகளை சமூக நிறுவனங்களுக்கு நிதி திரட்ட கூடுதல் வழியை வழங்குவதற்கு முன்னரே அறிவித்திருந்தது.

**4. அண்மையில் வெளியிடப்பட்ட SCALE செயலி, கீழ்க்காணும் எந்தத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு திறன் மேம்பாட்டுக்கான தீர்வுகளை வழங்குகிறது?**

அ. ஜவுளி

ஆ. தானியங்கி

**இ. தோல் ☑**

ஈ. மின்னணுவியல்



✓ தோல் தொழிற்துறையின் வேலைவாய்ப்புத் தேவைகள், திறன்மேம்பாடு, கற்றல், மதிப்பீடு ஆகியவற்றுக்கு ஓரிடத் தேர்வு வழங்கும் தோல் துறை ஊழியர்களுக்கான திறன் மதிப்பீட்டு சான்றிதழ் (SCALE (Skill Certification Assessment for Leather Employees)) செயலியை சென்னையில் உள்ள CSIR– CLRI நிகழ்வில், நடுவண் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார். தோல் தொழில் துறையில் பயிற்சி பெறுவோருக்கு வடிவமைத்தல் மற்றும் தயாரித்தளிப்பதற்காக தோல் திறன் துறை கவுன்சில், இந்தச் செயலியை உருவாக்கியுள்ளது.

**5. அண்மைய ஆசிய வளர்ச்சிக்கண்ணோட்டத்தின் புதுப்பிப்பின்படி, 2022–23–க்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பு என்ன?**




அ. 8.2%

ஆ. 7.6%

**இ. 7.0% ☑**

ஈ. 6.8%

✓ ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) அண்மையில் அதன் ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டத்தின் மேம்பட்ட பதிப்பை வெளியிட்டது. அந்த அறிக்கையின்படி, 2022–23–க்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பு ஏப்ரல் மாதத்தில் மதிப்பிடப்பட்ட 7.5%இலிருந்து 7%ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பணவீக்கம் எதிர்பார்த்ததை விட நிலையானதாக மாறியுள்ளது; மேலும், நாணயக் கொள்கையானது நுகர்வோரின் வாங்கும் ஆற்றலை சிதைக்கும் விதமாக உள்ளது என்று அவ்வறிக்கை கூறுகிறது.

**6. எந்த நாட்டில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் (UN) அவை வெளியிட்டுள்ளது?**




அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. அமெரிக்கா

ஈ. ஆஸ்திரேலியா

✓ சீனா தனது வடமேற்கு ஜின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் மற்றும் பிற இசுலாமிய இன சிறுபான்மையினரை குறிவைத்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக தெரிவித்த ஐக்கிய நாடுகள் (UN) அவையின் அறிக்கைக்கு பதிலளித்துள்ளது. பல்லாண்டுகளாக செயல்பாட்டில் உள்ள இந்த அறிக்கை அண்மையில்தான் வெளியிடப்பட்டது. 1 மில்லியனுக்கும் அதிகமான சிறுபான்மை இன உறுப்பினர்கள் மாற்று கல்வி நிலையங்களுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்டதாக அவ்வறிக்கை கூறுகிறது.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஜிக்யாசா 2.0' என்ற நிகழ்வுடன் தொடர்புடைய துறை எது?**

அ. நிதியியல்

**ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ☑**

இ. விளையாட்டு

ஈ. இசை

✓ ஜிக்யாசா 2.0 திட்டத்தின்கீழ், 'புதுப்பிக்கத்தக்க எரிபொருளுக்கான ஜிக்யாசா திட்டம்' குவாலியரில் உள்ள சிந்தியா கன்யா வித்யாலயா பள்ளி மாணாக்கருக்காக டேராடூனில் அமைந்துள்ள CSIR–இந்திய பெட்ரோலிய நிறுவனத்தில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. உணவுக்குப் பயன்படாத தாவர எண்ணெய்கள், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் & நெகிழிக்கழிவுகளை பல்வேறு வகையான எரிபொருட்களாக பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை வெளிக்கொணர்வதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

**8. அண்மையில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுவின் விற்பனைக்கு அனுமதி தந்த இந்திய மாநிலம் எது?**



அ. குஜராத்

**ஆ. மிசோரம் ☑**

இ. பஞ்சாப்

ஈ. சிக்கிம்

✓ மிசோரம் மாநில அமைச்சரவை உள்நாட்டில் விளையும் திராட்சையை தேறலாக பதப்படுத்தி சந்தையில் கட்டற்ற முறையில் விற்க அனுமதி தந்துள்ளது. இயற்கை திராட்சை முக்கியமாக கிழக்கு மிசோரமில் உள்ள சாம்பை மற்றும் ஹனாஹலான் பகுதிகளில் வளர்க்கப்படுகிறது. மிசோரம் மது (தடை) வரைவு விதிகள், 2022 ஆனது மாநிலத்தில் கண்டிப்பான முறையில் அமல்படுத்தப்பட வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் அறிவித்தார்.

**9. கிசான் கடனட்டையை (KCC) எண்மமயமாக்குவதற்கான சோதனைத் திட்டங்களை, இந்திய ரிசர்வ் வங்கி, கீழ்க்காணும் எந்தெந்த மாநிலங்களில் செயல்படுத்தவுள்ளது?**




அ. தமிழ்நாடு மற்றும் கேரளா

ஆ. மத்திய பிரதேசம் மற்றும் உத்தர பிரதேசம்

**இ. தமிழ்நாடு மற்றும் மத்திய பிரதேசம் ☑**

ஈ. மத்திய பிரதேசம் மற்றும் கேரளா

✓ கிசான் கடனட்டைகளை (KCC) எண்மமயமாக்குவதற்கான சோதனைத் திட்டங்களை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) இம்மாதம் முதல் தமிழ்நாடு மற்றும் மத்தியபிரதேசத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தும். இந்தத் திட்டத்தை ரிசர்வ் வங்கி புத்தாக்க மையம் (RBIH) உருவாக்குகிறது. இது KCC அடிப்படையிலான கடனளிப்பை மிகவும் திறமையானதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் செலவுகளைக் குறைப்பதன்மூலம் ஊர்ப் புற மக்களிடையே கடனோட்டத்தை இது மேம்படுத்துகிறது.

**10. இந்தியாவில் தேசிய ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**



**அ. செப்டம்பர்.05 ☑**

ஆ. செப்டம்பர்.10

இ. செப்டம்பர்.15

ஈ. செப்டம்பர்.20

✓ ஒவ்வோர் ஆண்டும் செப்.5ஆம் தேதி இந்தியா முழுவதும் ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிறது. இது, இந்தியாவின் முதல் குடியரசுத்துணைத்தலைவரும், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத்தலைவருமான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறது. அவர், 1888ஆம் ஆண்டு செப்டம்பர்.5ஆம் தேதி பிறந்தார். ஆசிரியர் நாள் முதன்முதலில் 1962ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது. உலக ஆசிரியர் நாள், சர்வதேச ஆசிரியர் நாள் என்றும் அழைக்கப்படுகிறது; அது ஆண்டுதோறும் அக்.5 அன்று கொண்டாடப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செப்.28 முதல் கம்போடியாவில் உலகத் திருக்குறள் மாநாடு**

கம்போடியா நாட்டில் செப்.28 முதல் அக்.3ஆம் தேதி வரை உலகத் திருக்குறள் மாநாடு நடக்கவிருக்கிறது. இந்த மாநாட்டையொட்டி, செப்.29ஆம் தேதி அங்கோர் நகரத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப்படுகிறது. கம்போடியா நாட்டின் கெமர் மொழியில் திருக்கு வெளியிடப்படுகிறது.

---

**2. இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகம்: தமிழ்நாடு அரசு அறிவிக்கை**

இந்தியாவிலேயே முதல் கடற்பசு பாதுகாப்பகம், தமிழக கடற்கரைப் பகுதியில் (பாக் விரிகுடா) 448 சதுர கிமீட்டரில் அமையவுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட உத்தரவு: தமிழக கடலோரப் பகுதிகளில் அழிந்துவரும் நிலையிலுள்ள, மிக அரிதான கடற்பசு இனத்தையும், அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு, மன்னார் வளைகுடா, பாக் விரிகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படும் என சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், 448 சதுர கிமீ பரப்பில் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக் விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அறிவித்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை செய்துள்ளது.

**கடற்பசுவின் சிறப்பு:** உலகின் மிகப்பெரிய தாவர வகை கடல் பாலூட்டிகளான கடற்பசுக்கள், கடற்புற்களை உண்டு வளர்ந்து வருகின்றன. கடற்பசு, இனங்களை பாதுகாப்பதனால், கடல் பகுதிகளுக்கு அடியில் உள்ள கடற்புற்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், வளிமண்டல கார்பனை அதிகளவில் நிலைப்படுத்தவும் உதவி செய்கிறது. கடற்புல் படுகைகள் வணிகரீதியாக மதிப்புமிக்க பல மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு இனப்பெருக்கம் செய்ய ஏதுவாகவும், உணவளிக்கும் இடமாகவும் உள்ளது.

பாக் விரிகுடாவையொட்டிய கரையோர மக்கள் கடற்பசுக்களை பாதுகாப்பதன் அவசியத்தைப் புரிந்துகொண்டு, பல முறை மீன்பிடி வலையில் சிக்கிய கடற்பசுக்களை மீனவர்கள் வெற்றிகரமாக கடலில் விட்டுள்ளனர். இதைப் பாராட்டி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அவர்களுக்கு அரசு சார்பில் பாராட்டுச்சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

கடற்பசுக்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவருகின்றன. இப்போது சுமார் 240 கடற்பசுக்கள் மட்டுமே இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பெரும்பான்மையானவை தமிழ்நாட்டின் கடற்கரையில் காணப்படுகின்றன. எனவே, கடற்பசுக்கள், அவற்றின் வாழ்விடத்தை அழிவிலிருந்து பாதுகாக்க உடனடித் தேவை ஏற்பட்டுள்ளது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற, பாக் விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அமைத்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**கட்டுப்பாடுகள் இல்லை:** தமிழக அரசின் அறிவிக்கை மூலமாக எந்தவொரு புதிய கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் விதிக்கப்படப் போவதில்லை. கடற்பசு பாதுகாப்பகம் என்பது இந்தியாவிலேயே முதன்முதலாக அமைக்கப்படும் பாதுகாப்பகமாகும். இதனால், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், உலகெங்கிலும் உள்ள வன உயிரின பாதுகாவலர்கள் அனைவரும் பெருமைகொள்வர் என்று அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**1. 'UPI லைட்' கொடுப்பனவு பரிவர்த்தனையின் உச்சவரம்பு என்ன?**

அ. ரூ.1000




ஆ. ரூ.500

**இ. ரூ.200 ☑**

ஈ. ரூ.100

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆளுநர், சக்திகாந்த தாஸ் சமீபத்தில் குளோபல் ஃபின்டெக் ஃபெஸ்ட்–2022இல் மூன்று முக்கிய டிஜிட்டல் கொடுப்பனவு முனைவுகளைத் தொடங்கினார். இந்த முனைவுகளில் UPIஇல் ரூபே கடனட்டை பயன்பாடு, UPI LITE, பாரத் பில்பே – எல்லைதாண்டிய இரசீது கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கும். BHIM செயலியில் UPI லைட்மூலம், பயனர்கள் இணையமற்ற பயன்முறையில் சிறுமதிப்புள்ள பரிவர்த்தனைகளை செய்யவியலும். UPI லைட்டின் கொடுப்பனவு பரிவர்த்தனையின் அதிகபட்ச வரம்பு ₹200 ஆகும்.

**2. 'சர்வதேச சைகை மொழிகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. செப்டம்பர்.20




**ஆ. செப்டம்பர்.23 ☑**

இ. செப்டம்பர்.25

ஈ. செப்டம்பர்.27

✓ காதுகேளாதோரின் மனித உரிமைகளை உணர்ந்துகொள்வதில் சைகை மொழிகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை செப்.23ஆம் தேதியை சர்வதேச சைகை மொழிகள் நாளாக அறிவித்தது. கடந்த 1951ஆம் ஆண்டு ரோமில் உலக காது கேளாதோர் கூட்டமைப்பு நிறுவப்பட்ட நாளை இந்த நாள் நினைவுகூருகிறது. சர்வதேச காது கேளாதோர் வாரத்தின் ஒருபகுதியாக, கடந்த 2018ஆம் ஆண்டில் சைகை மொழிகளின் சர்வதேச நாள் முதன்முதலில் கொண்டாடப்பட்டது.

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கிகாலி திருத்தத்துடன் தொடர்புடைய நடவடிக்கை எது?**

அ. மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பது




**ஆ. ஹைட்ரோஃப்ளூரோகார்பன்களைக் குறைத்தல் ☑**

இ. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நுகர்வை அதிகரித்தல்

ஈ. நிலக்கரி ஆலைகளைப் படிப்படியாக ஒழித்தல்

✓ குளிர்பதன சாதனங்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் விதமாக, அமெரிக்க செனட், அண்மையில் ஓசோன் மாசுபாடு தொடர்பான கடந்த 1987 மாண்ட்ரீல் நெறிமுறைக்கான கிகாலி திருத்தத்திற்கு ஒப்புதலளித்தது. அடுத்த பதினான்கு ஆண்டுகளில் HFC–கள் எனப்படும் ஹைட்ரோபுளோரோகார்பன்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை 85% குறைக்க அந்தச் சர்வதேச ஒப்பந்தம் நோக்கம் கொண்டுள்ளது. சீனா, இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட 130–க்கும் மேற்பட்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்தை முறையாக அங்கீகரித்துள்ளன.

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'நிலவு வெளிச்சம் (Moonlighting)' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ. விண்வெளி அறிவியல்

**ஆ. வேலைவாய்ப்பு ☑**



இ. உளவியல்

ஈ. நிதியியல்

✓ இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான விப்ரோ தனது போட்டி நிறுவனங்களுக்காக ஒரே நேரத்தில் பணி புரிவதாகக் கண்டறியப்பட்ட 300 ஊழியர்களின் வேலையைப் பறித்துள்ளது. இச்செயல், 'மூன்லைட்டிங்' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நடைமுறையானது ஆர்வத்தில் முரண்பாடு, தரவுகளின் மீறல்கள் மற்றும் நிறுவனத்தின் அறிவுசார் சொத்து மற்றும் சொத்துக்களின் தவறான பயன்பாடு ஆகியவற்றை உருவாக்கலாம் என்று நிறுவனங்கள் அச்சங்கொள்கின்றன.

**5. 'ஸ்வதேஷ் தர்ஷன்' திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. கலாச்சார அமைச்சகம்

**ஆ. சுற்றுலா அமைச்சகம் ☑**

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. தகவல் தொடர்பு அமைச்சகம்

पर्यटन मंत्रालय
MINISTRY OF TOURISM
सत्यमेव जयते

✓ சுற்றுலா அமைச்சகம் இராமாயண சுற்று, பௌத்த சுற்று, கடற்கரையோர சுற்று மற்றும் பாலைவன சுற்று உள்ளிட்ட 15 சுற்றுலா சுற்றுகளை அதன் 'ஸ்வதேஷ் தர்ஷன்' திட்டத்தின்கீழ் அடையாளம் கண்டுள்ளது.

✓ நடுவண் சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி, 'அம்பேத்கர் சுற்றை' பயணித்து காண்பதற்கான சிறப்பு சுற்றுலா இரயிலை அறிவித்தார். இந்த இரயில் டாக்டர் பி ஆர் அம்பேத்கருடன் தொடர்புடைய முக்கிய இடங்களான மோவ் (அவர் பிறந்த இடமான இந்தூரில் உள்ள Dr அம்பேத்கர் நகர்), இலண்டன் (அவர் தங்கியிருந்து படித்த இடம்), நாக்பூர் (படித்த இடம்), தில்லி (காலமான இடம்) மற்றும் இறுதியாக மும்பை (அவர் தகனம் செய்யப்பட்ட இடம்) இடங்களை உள்ளடக்கி பயணிக்கும்.

**6. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில், சிறந்த தொழில்நுட்ப மையங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்திய நகரம் எது?**

**அ. பெங்களூரு ☑**

ஆ. மும்பை

இ. சென்னை

ஈ. ஹைதராபாத்



✓ குஷ்மேன் மற்றும் வேக்ஃபீல்டின் அறிக்கையின்படி, சிறந்த தொழில்நுட்ப மையங்களின் பட்டியலில் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் பெங்களூரு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. சீனாவின் பெய்ஜிங் முதலிடத்தில் உள்ளது. "Tech Cities: The Global Intersection of Talent and Real Estate" என்ற தலைப்பிலான அறிக்கை, உலகம் முழுவதும் உள்ள 115 வெவ்வேறு, 'தொழில்நுட்ப நகரங்களை' ஆய்வு செய்தது. மற்ற மூன்று இந்திய நகரங்களான சென்னை, தில்லி மற்றும் ஹைதராபாத் அடுத்த மூன்று இடங்களில் உள்ளன. APAC–இன் 14 நகரங்களின் பட்டியலில் மும்பை மற்றும் புனே எட்டு மற்றும் ஒன்பதாவது இடங்களில் உள்ளன.

**7. லிஸ் டிரஸ் என்பார் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார்?**

அ. பிரான்ஸ்

**ஆ. ஐக்கிய இராச்சியம் (UK) ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஜெர்மனி



✓ ஐக்கிய இராச்சியத்தின் புதிய பிரதமராக பழைமைவாத கட்சியின் தலைவர் லிஸ் ட்ரஸ் நியமிக்கப்பட்டார். ஜூலை மாதம் போரிஸ் ஜான்சன் பதவி விலகிய பின்னர், ஆளும் பழைமைவாத கட்சியின் உட்கட்சி தலைமைப்போட்டியில் 47 வயதான லிஸ் ட்ரஸ் தனது போட்டியாளரான முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக்கை தோற்கடித்தார். தெரசா மே மற்றும் மார்கரெட் தாட்சரைத் தொடர்ந்து இங்கிலாந்தின் மூன்றாவது பெண் பிரதமராக லிஸ் ட்ரஸ் ஆனார்.

**8. அகமதாபாத்தில் நடைபெறவுள்ள 36ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிக்கான சின்னத்தின் பெயர் என்ன?**

அ. ஷெர்

**ஆ. சவாஜ் ☑**

இ. விகாஸ்

ஈ. லியோ

✓ அகமதாபாத்தில் நடைபெறவுள்ள 36ஆவது தேசிய விளையாட்டுப்போட்டிக்கான சின்னம் மற்றும் கீதத்தை நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். இந்தச் சின்னத்திற்கு குஜராத்தியில், 'குட்டி' என்று பொருள்படும் 'சவாஜ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. கீதத்தின் கருப்பொருள், 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' என்ற அடிப்படையில் உள்ளது. தேசிய விளையாட்டுப் போட்டிகள், குஜராத் மாநிலத்தில் உள்ள ஆறு நகரங்களில் செப்டம்பர்.29 முதல் அக்டோபர்.12 வரை நடத்தப்படும்.

**9. தில்லியிலுள்ள பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த பள்ளிகள் மற்றும் மாதிரிப்பள்ளிகள் திட்டத்தைத் தொடக்கிய மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. குஜராத்

✓ தமிழ்நாடு அரசானது தில்லியில் உள்ள பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த பள்ளிகள் மற்றும் மாதிரிப் பள்ளிகள் திட்டத்தைத் தொடக்கியது. தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தார். தொடக்க நிலையில், 26 சிறந்த பள்ளிகள் மற்றும் 15 மாதிரிப்பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் தொடக்கப்பட்டுள்ளன. 'தகைசல் பள்ளிகள்' மற்றும் 'மாதிரிப்பள்ளிகள்' ஆகியவை சிறந்த பள்ளிகள் மற்றும் மாதிரிப்பள்ளிகளுக்கான அதிகாரப்பூர்வ தமிழ்ப்பெயர்களாகும்.

**10. 'Our Great National Parks' என்ற ஆவணத்தொடருக்காக 'சிறந்த கதைசொல்லி'க்கான எம்மி விருதை வென்ற முன்னாள் அதிபர் / குடியரசுத்தலைவர் யார்?**

**அ. பராக் ஒபாமா ☑**

ஆ. இம்மானுவேல் மக்ரோன்

இ. இராம்நாத் கோவிந்த்

ஈ. ஷின்சோ அபே



✓ அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தனது நெட்ஃபிளிக்ஸ் ஆவணப்படத் தொடரான, 'Our Great National Parks'–க்காக 'சிறந்த வசனகர்த்தா'வுக்கான எம்மி விருதை வென்றார். பராக் ஒபாமாவின் தயாரிப்பு நிறுவனமான ஹையர் கிரவுண்ட், உலகெங்கிலும் உள்ள தேசியப்பூங்காக்களைப் பற்றிய இந்தத் தொடரைத் தயாரித்துள்ளது. முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, ஏற்கனவே இரண்டு கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார். இதன்மூலம் வரலாற்றில் எம்மி விருதை வென்ற இரண்டாவது அமெரிக்க அதிபர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'நிஸ்தார்', 'நிபுண்' ஆழ்கடல் பயிற்சிக் கப்பல்கள் கடற்படையில் இணைப்பு**

ஆழ்கடல் பயிற்சி மற்றும் நீர்மூழ்கிக்கப்பல்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தும் வகையில், இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட 'நிஸ்தார்', 'நிபுண்' ஆகிய கப்பல்கள் விசாகப்பட்டினத்தில் வைத்து கடற்படையில் இணைக்கப்பட்டது. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இவ்விரண்டு கப்பல்களும் விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ள ஹிந்துஸ்தான் கப்பல் கட்டுமான நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டன.

இந்திய தொழிற்நிறுவனங்கள் குறிப்பாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்புடன் இவ்விரு பயிற்சிக் கப்பல்களும் தயாரிக்கப்பட்டன. இந்தியா முழுவதும் உள்ள 120–க்கும் மேற்பட்ட இத்தகைய நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் பங்காற்றியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. இக்கப்பல்கள் நீர்முழ்கிக் கப்பல்களை மீட்பது மற்றும் ஆழ்கடல் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படும். கடற்பகுதியில் ஹெலிகாப்டர்களை இயக்கும் நடவடிக்கையிலும் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையிலும் இவை ஈடுபடுத்தப்படும் எனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**1. இந்தியாவில் சூரிய ஆற்றல் உற்பத்திப் பண்ணைகளை அமைத்த முதல் மின்னணு வணிக நிறுவனம் எது?**

அ. வால்மார்ட்

**ஆ. அமேசான் ☑**

இ. பிளிப்கார்ட்

ஈ. ஈபே

✓ அமேசான் நிறுவனம் தனது முதல் சூரிய ஆற்றல் உற்பத்தித் திட்டத்தை இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்தில் மூன்று புதிய சூரிய ஆற்றல் உற்பத்திப் பண்ணைகளை அமைப்பதன்மூலம் தொடங்கியுள்ளது. இப்பண்ணையின் ஒருங்கிணைந்த ஆற்றல் திறன் 420 MW ஆகும். 2025ஆம் ஆண்டுக்குள் அமேசான் தனது வணிகத்தில் 100% புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியத் திட்டத்தில் 210–மெகாவாட் திட்டம் 'ReNew Power' மூலம் உருவாக்கப்படும். 100–மெகாவாட் திட்டம் Amp எனர்ஜி இந்தியாவால் உருவாக்கப்பட உள்ளது. புரூக்ஃபீல்டின் 110–MW திட்டமும் இதிலடங்கும்.

**2. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தில் உள்ள இலக்கைத் தாக்கவல்ல இரட்டை செயல்பாட்டு திறனுடன்கூடிய பிரம்மோஸ் ஏவுகணையை கொள்முதல் செய்வதற்காக கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது?**

அ. டசால்ட் ஏவியேஷன்

ஆ. துருவ் ஏரோஸ்பேஸ்

இ. DRDO

**ஈ. BAPL ☑**

✓ ₹1700 கோடி மதிப்பில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தில் உள்ள இலக்கைத் தாக்கவல்ல இரட்டை செயல்பாட்டு திறனுடன்கூடிய பிரம்மோஸ் ஏவுகணையை கொள்முதல் செய்வதற்காக பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் தனியார் நிறுவனத்துடன் (BAPL) பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. இரட்டை செயல்பாட்டு திறன்கொண்ட இந்த ஏவுகணைகள், இந்திய கடற்படையின் திறனை மேம்படுத்தும். பிரம்மோ ஏரோஸ்பேஸ் தனியார் நிறுவனம் என்பது இந்தியா–ரஷ்ய கூட்டுநிறுவனமாகும். நிலத்தில் செயல்படக்கூடியதாகவும், கப்பல்மீதான தாக்குதலை முறியடிக்கும் வகையிலும், இந்தப் புதிய வகை ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.

**3. தேசிய சுற்றுச்சூழல் அமைச்சர்கள் மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா

ஆ. கோவா

**இ. குஜராத் ☑**

ஈ. கேரளா

✓ பிரதமர் நரேந்திர மோதி, குஜராத் மாநிலத்தின் ஏக்தா நகரத்தில் செப்.23 அன்று காணொளிமூலம் சுற்றுச்சூழல் அமைச்சர்களின் தேசிய மாநாட்டைத் தொடங்கிவைத்தார். செப்.23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள இந்த இரண்டு நாள் மாநாட்டில், வாழ்க்கை, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல் (மாசுகளைத் தணித்தல் மற்றும் காலநிலை தாக்கங்களுக்கு ஏற்ப பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல்திட்டங்களை மேம்படுத்துதல்), பரிவேஷ் (ஒருங்கிணைந்த பசுமை அனுமதிகளுக்கான ஒற்றை சாளர அமைப்பு) ; வனமேலாண்மை; மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு; வனவுயிரிகள் மேலாண்மை; நெகிழி மற்றும் கழிவு மேலாண்மையை கடைப்பிடித்தல் ஆகிய தலைப்புகளுடன் ஆறு கருப்பொருள் அமர்வுகள் நடைபெறும்.

**4. ரூபாய் வர்த்தகத்திற்காக இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அனுமதியைப் பெற்ற முதல் இந்திய வங்கி எது?**

அ. பாரத வங்கி

ஆ. HDFC வங்கி

**இ. UCO வங்கி ☑**

ஈ. பெடரல் வங்கி

✓ இந்தியப் பொதுத்துறை வங்கியான UCO வங்கி ரூபாய் வர்த்தகத்திற்கான இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலைப் பெற்ற முதல் வங்கியாக உள்ளது. கொல்கத்தாவைச் சார்ந்த இவ்வங்கி, இந்திய ரூபாயில் வர்த்தக தீர்வைக் காண்பதற்காக ரஷ்யாவின் காஸ்ப்ரோம்பேங்கில் சிறப்பு வோஸ்ட்ரோ கணக்கைத் திறக்கவுள்ளது. கடந்த ஜூலை மாதம், இந்திய வங்கிகள் இந்திய நாணயத்தில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கும் முடிவை ரிசர்வ் வங்கி அறிவித்தது. இந்திய ரிசர்வ் வங்கியானது இந்தியாவிற்கும் இலங்கை மற்றும் ரஷ்யா உள்ளிட்ட பிற நாடுகளுக்கும் இடையே வர்த்தக தீர்வுகளை அனுமதித்துள்ளது.

**5. "The India Way: Strategies for an Uncertain World" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

அ. நரேந்திர மோடி

**ஆ. S ஜெய்சங்கர் ☑**

இ. அருண் ஜெட்லி

ஈ. இரகுராம் இராஜன்



✓ வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர் அண்மையில் குஜராத்தில் தனது, "The India Way: Strategies for an Uncertain World" என்ற நூலின் குஜராத்தி மொழி பதிப்பை வெளியிட்டார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்த நூலின் அசல் பதிப்பு, கடந்த 2020ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர், இந்த நூலில், 'உலகளாவிய ஒழுங்கு மாறும்போது இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை எதை நோக்கி என்னவாக இருக்க வேண்டும்?' என்ற கேள்விக்கு பதிலளிக்க முயற்சி செய்கிறார்.

**6. கீழ்க்காணும் எந்த நகரத்தில் ₹3,800 கோடி மதிப்பிலான இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார்?**

அ. மைசூரு

**ஆ. மங்களூரு ☑**

இ. புனே

ஈ. கொச்சின்



✓ ₹3,800 கோடி மதிப்பிலான இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மங்களூருவில் அடிக்கல் நாட்டினார். புதிய மங்களூரு துறைமுக ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள் கலன்கள் மற்றும் பிற சரக்குப் பெட்டகங்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். மேலும், துறைமுகத்தால் மேற்கொள்ளப்பட்ட சுமார் ₹1,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். மங்களூரு சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்மூலம் மேற்கொள்ளப்பட்ட இரண்டு திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

**7. ஹோமியோபதியின் பெருமைக்கான உலக நல உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?**

அ. இந்தியா **ஆ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ. சிங்கப்பூர் ஈ. சீனா



✓ 'ஹோமியோபதியின் பெருமைக்கான உலக நல உச்சிமாநாட்டின்' முதலாவது பதிப்பு துபாயில், "காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதலால் ஏற்படும் நோய்கள்" என்ற தலைப்பில் நடந்தது. இந்த உச்சிமாநாடு, ஹோமியோபதி மருத்துவமுறை, மருந்துகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டது. இந்த உச்சி மாநாட்டில், நடுவண் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே உரையாற்றினார்.

**8. 'உயிரி–கிராமங்களை' வெற்றிகரமாக அமைத்துள்ள இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. ஹிமாச்சல பிரதேசம்

ஆ. அஸ்ஸாம்

**இ. திரிபுரா ☑**

ஈ. மேற்கு வங்காளம்




✓ திரிபுரா மாநில அரசு, நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம் தணிப்பு மற்றும் காலநிலை தழுவல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஐந்து 'உயிரி கிராமங்களை' வெற்றிகரமாக அமைத்துள்ளது. இந்திய மாநிலங்களில் பின்பற்றப்பட்டு வரும் காலநிலை நடவடிக்கைகள் குறித்த சிறந்த நடைமுறைகளின் தொகுப்பின்படி, திரிபுராவில், வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட ஐந்து 'உயிரி–கிராமங்களின்' மூலம் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக கடந்த 2018ஆம் ஆண்டில் திரிபுராவின் உயிரித்தொழில்நுட்ப இயக்குநரகத்தால், 'Bio–Village' என்ற கருத்தாக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அரவிந்த் சிதம்பரம் சார்ந்த விளையாட்டு எது?**

அ. ஸ்குவாஷ்

ஆ. பூப்பந்து

**இ. சதுரங்கம் ☑**

ஈ. டேபிள் டென்னிஸ்



✓ கிராண்ட்மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் அண்மையில் 22ஆவது துபாய் ஓபன் செஸ் போட்டியில் சாம்பியன் ஆனார். ஏழு இந்தியர்கள் முதல் பத்து இடங்களைப் பிடித்தனர்; மேலும் R பிரக்னாநந்தா இரண்டாவது இடத்தை அபிஜீத் குப்தா, ஜெய்குமார் சம்மேட் ஷேட் மற்றும் S P சேதுராமன் உள்ளிட்ட ஐந்து பேருடன் பகிர்ந்துகொண்டார்.

**10. NITI ஆயோகின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, போஷான் அபியான் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முதல் இடத்தைப் பிடித்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. பஞ்சாப்

✓ "Preserving Progress on Nutrition in India: Poshan Abhiyan in Pandemic Times" என்ற தலைப்பில் NITI ஆயோக் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, போஷான் அபியான் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மகாராஷ்டிர மாநிலம் மாநிலங்களுள் முதலிடத்தைப் பிடித்தது. ஆந்திர பிரதேசம் இரண்டாவது இடத்திலும், குஜராத் மூன்றாவது இடத்திலும் உள்ளன. COVID காலத்தில் போஷானைச் செயல்படுத்த தேவையான 100% மனிதவள ஆட்சேர்ப்பில் ஆந்திர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. அங்கன்வாடி பணியாளர்களுக்கு மொபைல் போன்கள் விநியோகம் செய்வதிலும் ஆந்திர பிரதேசம் முதலிடம் வகிக்கிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாட்டுநலப்பணி திட்ட விருதுகளை வழங்கினார் குடியரசுத்தலைவர்**

இந்தியக் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, 2020–21ஆம் ஆண்டுக்கான நாட்டுநலப்பணி திட்ட விருதுகளை வழங்கினார். 5 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr R ரமேசுக்கு, பல்கலைக்கழகம்/பிளஸ்டூ கவுன்சில் பிரிவில் விருது வழங்கப்பட்டுள்ளது. யூனிட் திட்ட அலுவலர்கள் பிரிவில் மதுரை ஸ்ரீமீனாட்சி கலைக்கல்லூரிக்கு விருது அளிக்கப்பட்டுள்ளது. தன்னார்வலர்கள் பிரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜெயசீலன், மதுரை மெப்கோ சிலீக் பொறியியல் கல்லூரியின் வரதராஜன் ஆகியோர் விருது பெற்றுள்ளனர்.

---

**2. இணையவழியில் பட்டா மாறுதல்: முதல்வர் தொடக்கம்**

பட்டா மாறுதலுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதியை முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கிவைத்தார். இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: நில உரிமையாளர்கள் பட்டாமாறுதலுக்கான விண்ணப்பங்களை பொதுச்சேவை மையங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் வாயிலாக விண்ணப்பித்து, அவை இணையவழியில் பரிசீலிக்கப்படுகின்றன. பின்னர், பட்டா மாறுதலுக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்போது, பொதுமக்களின் வசதிக்காக எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பட்டா மாறுதல் கோரி இணையவழியில் (www.tamilnilam.tn.gov.in/citizen) விண்ணப்பிக்கும் புதிய வசதி தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்புதிய சேவையின் மூலம் பொதுமக்கள் பட்டா மாற்றத்துக்கு விண்ணப்பிக்க வட்டாட்சியர் அலுவலகங்கள், பொதுச்சேவை மையங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமிருக்காது. மேலும், நில உட்பிரிவுக்கான கட்டணம், செயலாக்கக் கட்டணங்களைச் செலுத்த வங்கிகளுக்கு நேரில் செல்லாமல், இணையவழியிலேயே செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, பொதுமக்கள் பட்டா உத்தரவின் நகல், பட்டா, புலப்படச் சுவடி ஆகியவற்றை எங்கிருந்தும் எந்த நேரத்திலும் இணையவழிச் சேவைமூலம் கட்டணம் ஏதுமின்றி பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதனால், பொதுச்சேவை மையங்களுக்குச் செல்வதும், வட்ட அலுவலகங்களில் இடைத்தரகர்களால் பொதுமக்கள் அவதிப்படுவதும் தவிர்க்கப்படும்.

**இணையவழியில் வரைபடங்கள்:** நகரப்புலங்களுக்கான வரைபடங்கள் www.eservices.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதையும் இணையதளத்திலிருந்து கட்டணம் இல்லாமல் பதிவிறக்கம் செய்யலாம். மனை அங்கீகாரம், வங்கிக்கடன் பெறுதல் போன்ற இதர சேவைகளுக்கு வரைபடங்கள் மிகுந்த தேவையாக உள்ளன. இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டதால், இதற்காக பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகம் வருவது தவிர்க்கப்படும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. ஊரகத் திறன் பயிற்சி: பிரிட்டிஷ் கவுன்சிலுடன் தமிழக அரசு ஒப்பந்தம்**

ஊரகத் திறன் பயிற்சி அளிக்கும் திட்டத்தை தரப்படுத்த, பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்துடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தீனதயாள் உபாத்தியாய ஊரகத்திறன் பயிற்சித்திட்டமானது, 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட கிராமப்புற ஏழை, எளிய இளைஞர்களுக்கு திறன் பயிற்சியளித்து, அவர்களுக்கு நிரந்தர வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. அவர்களுக்கு மென்திறன் பயிற்சியளிப்பது மிகவும் முக்கியமாகும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன் உலகில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தை தொழில்நுட்ப உதவி நிறுவனமாகக்கொண்டு செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது.

---

**1. மாதிரி பதிவு அமைப்பு அறிக்கை – 2020இன்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் என்னவாக இருந்தது?**

அ. 25

**ஆ. 32 ☑**

இ. 37

ஈ. 40




- ✓ 2022 செப்.22 அன்று வெளியான இந்திய மாதிரி பதிவு அமைப்பு வெளியிட்ட புள்ளிவிவர அறிக்கை–2020இன்படி, 2030ஆம் ஆண்டுக்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்காக, கடந்த 2014ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் இறப்பு விகிதம், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவுசெய்துவருகிறது.
- ✓ 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் கடந்த 2020ஆம் ஆண்டில் 1000 பிறப்புகளுக்கு 32ஆக இருந்தது. கடந்த 2019ஆம் ஆண்டில் 1000 பிறப்புகளுக்கு 35ஆக இருந்தது. சிறுகுழந்தை இறப்பு விகிதமானது (IMR) கடந்த 2020ஆம் ஆண்டில் 1000 உயிர்ப்பிறப்புக்கு 28ஆகவும் கடந்த 2019ஆம் ஆண்டில் 1000 உயிர்ப்பிறப்புக்கு முப்பது ஆகவும் இருந்தது.

**2. இந்தியா எந்த மாநிலத்திலிருந்து தாவர அடிப்படையிலான இறைச்சிப்பொருட்களின் முதல் சரக்குகளை ஏற்றுமதி செய்தது?**

அ. பீகார்

**ஆ. குஜராத் ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா



- ✓ குஜராத் மாநிலத்தின் கேதா மாவட்டத்திலிருந்து அமெரிக்காவின் கலிபோர்னியாவுக்கு தாவர அடிப்படையிலான இறைச்சிப்பொருட்களின் முதல் சரக்குகளை இந்தியா ஏற்றுமதி செய்தது. வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களுக்கான ஏற்றுமதி ஆணையம் (APEDA) சைவ உணவு வகையின்கீழ் தாவர அடிப்படையிலான இறைச்சிப்பொருட்களின் முதல் சரக்கு ஏற்றுமதியை எளிதாக்கியது. APEDA ஆனது ஆஸ்திரேலியா, இஸ்ரேல், நியூசிலாந்து மற்றும் பிற நாடுகளில் சைவ உணவு வகைகளை விளம்பரப்படுத்த திட்டமிட்டுள்ளது.


**3. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட, 'இந்திய சைகை மொழி அகராதி' திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. ISL Seekho செயலி

**ஆ. Sign Learn செயலி ☑**


இ. Bharat Sign செயலி

ஈ. India Sign Language செயலி



- ✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், 'இந்திய சைகை மொழி அகராதி' என்ற திறன்பேசி செயலியை 'Sign Learn' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியது. இது 10,000 சொற்களைக்கொண்ட இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் இந்திய சைகை மொழி அகராதியை அடிப்படையாகக் கொண்டதாகும். செவித் திறன் குறைபாடுள்ள குழந்தைகள் பாடநூல்களை அணுகும் வகையில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான NCERT பாடநூல்களை இந்திய சைகை மொழியில் மாற்றுவதற்காக NCERT உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (ISLRTC) கையெழுத்திட்டது.

**4. சந்திரனில், 'Changesite–(Y)' எனப் பெயரிடப்பட்ட சந்திர படிகத்தைக் கண்டுபிடித்த நாடு எது?**



அ. இஸ்ரேல்

**ஆ. சீனா ☑**

இ. அமெரிக்கா

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ நிலவினருகிலுள்ள எரிமலைக்குப்பைகளில் புதிய வகை படிகத்தை சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பூமியில் தூய மற்றும் திறன்மிக்க ஆற்றலை உற்பத்தி செய்வதற்கான சாத்தியம் மிகுந்த ஆற்றல்மூலத்தையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். சிறிய, ஒளிபுகு அப்படிகமானது, சீன நிலவு தெய்வமான சாங்கேயின் நினைவாக, Changesite–(Y) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**5. 'ஸ்வச் வாயு சர்வேக்ஷன்' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**



அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ☑**

இ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தேசிய மாசற்ற காற்றுத் திட்டம் – 2019 (NCAP) கீழ், 'ஸ்வச் வாயு சர்வேக்ஷன்' திட்டத்தைத் தொடங்கும். 2025–26–க்குள் காற்று மாசுபாட்டை 40 சதவீதம் வரை குறைப்பதற்காக, NCAPஇன் ஒருபகுதியாக தயாரிக்கப்பட்ட நகர்ப்புற செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 'ஸ்வச் வாயு சர்வேக்ஷன்' நாட்டில் உள்ள 131 நகரங்களைத் தரவரிசைப்படுத்தும்.

**6. இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே, கீழ்க்காணும் எந்நாட்டின் கௌரவ ஜெனரல் பதவியை பெற்றார்?**



**அ. நேபாளம் ☑**

ஆ. வங்காளதேசம்

இ. மியான்மர்

ஈ. இலங்கை

✓ இந்திய இராணுவத்தின் தலைமைத்தளபதி மனோஜ் பாண்டேவுக்கு, நேபாள அதிபர் வித்யா தேவி பண்டாரி, நேபாள இராணுவத்தின் ஜெனரல் பதவியை வழங்கினார். இவ்விழா இருநாட்டு இராணுவங்களுக்கிடையேயான தனித்துவமான பாரம்பரியத்தின் ஒருபகுதியாக உள்ளது. ஜெனரல் மனோஜ் பாண்டே, நான்கு நாள் அலுவல்பூர்வ பயணமாக நேபாளத்திற்குச் சென்றுள்ளார். பீரங்கி உபகரணங்கள், சுரங்கப்பாதுகாப்பு வாகனங்கள், மருத்துவக் கடைகள் மற்றும் குதிரைகள் உள்ளிட்ட இராணுவ உதவிகளையும் அவர் நேபாள இராணுவத்துக்கு வழங்கினார்.

**7. தேசிய கூட்டுறவுக் கொள்கை ஆவணத்தை வரைவதற்கான குழுவின் தலைவர் யார்?**



அ. அமித் ஷா


**ஆ. சுரேஷ் பிரபு ☑**

இ. L K அத்வானி

ஈ. முரளி மனோகர் ஜோஷி

- ✓ நடுவண் கூட்டுறவு அமைச்சகமானது தேசிய கூட்டுறவுக் கொள்கை ஆவணத்தை உருவாக்குவதற்கான குழுவை உருவாக்கியுள்ளது. முன்னாள் நடுவணமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையில் நாற்பத்தெழுவர் (47) கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள தேசிய கூட்டுறவுக் கொள்கையானது கடந்த 2002இல் உருவாக்கப்பட்டது. தற்போது, இந்தியாவில் சுமார் 8.5 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் 29 கோடி உறுப்பினர்களைக்கொண்டுள்ளன.

**8. 'Transforming Literacy Learning Spaces' என்பது செப்டம்பர்.8 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்புநாளின் கருப்பொருளாகும்?**




அ. உலக கல்வி நாள்


**ஆ. உலக எழுத்தறிவு நாள் ☑**

இ. உலக கலாச்சார நாள்

ஈ. உலக சமூக கற்றல் நாள்

- ✓ எழுத்தறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், நம்மைச் சுற்றியுள்ள உள்ளூர் சமூகங்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவுமாக ஒவ்வோர் ஆண்டும் செப்.8 அன்று உலக எழுத்தறிவு நாள் அனுசரிக்கப்படு –கிறது. கடந்த 1966ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (UNESCO) செப்.8 உலக எழுத்தறிவு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. "Transforming Literacy Learning Spaces" என்பது இந்த ஆண்டு (2022) உலக எழுத்தறிவு நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**9. தற்போதைய எரிவாயு விலை சூத்திரத்தை மதிப்பாய்வு செய்வதற்காக அண்மையில் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**



அ. சுரேஷ் பிரபு

**ஆ. கிரிட் பரிக் ☑**

இ. ஜிதேந்திர சிங்

ஈ. ஹர்தீப் சிங் பூரி

- ✓ பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், தற்போதைய எரிவாயு விலை சூத்திரத்தை மறுபரிசீலனை செய்வதற்காக புகழ்பெற்ற எரிசக்தி நிபுணர் கிரிட் பரிக் தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது. உலகளாவிய இயற்கை எரிவாயு விலைகள் அதிகரித்து வருவதால் எரிசக்தி மற்றும் தொழிற்துறை செலவுகள் அதிகரிப்பது குறித்து கவலைகள் அதிகரித்துள்ளன. இம்மாத இறுதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

**10. UNESCO பாரம்பரியக் கள இணைப்பிற்காக முன்மொழியப்பட்ட நீலவூரல்லு மற்றும் சாயா சோமேஸ்வராலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. கர்நாடகா

ஆ. பஞ்சாப்

இ. குஜராத்

**ஈ. தெலுங்கானா ☑**

unesco
United Nations
Educational, Scientific
and Cultural Organization

- ✓ தெலுங்கானா மாநிலமானது UNESCOஇன் உலக பாரம்பரியக் களப் பட்டியலில் இணைப்பதற்காக கட்டடக்கலை சிறப்புடன் கூடிய இரண்டு நினைவுச்சின்னங்களை முன்மொழிந்துள்ளது. நீலவூரல்லு பெருங்கற்கால புதைகுழி மற்றும் சாயா சோமேசுவராலயம் ஆகியவை அங்கீகாரத்திற்காக முன்மொழியப்பட்டுள்ளன. காகத்திய ருத்ரேஸ்வரா கோவிலானது (இராமப்பா கோவில்) ஏற்கனவே உலக பாரம்பரியக் களப் பட்டியலில் உள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கிராமத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை கண்டுபிடிக்க, நாடு முழுவதும் பயன்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சி அமைச்சகம், 'ஜல்தூத் செயலி'யை உருவாக்கியுள்ளது.**

ஊரக வளர்ச்சி அமைச்சகம், 'ஜல்தூத் செயலி'யை உருவாக்கியுள்ளது. இது கிராமத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை கண்டுபிடிக்க நாடு முழுவதும் பயன்படுத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை ஆண்டுக்கு இருமுறை (பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய) காலங்களில் அளவிடுவதற்கான வேலைவாய்ப்புக்கு 'ஜல்தூத்' செயலி உதவும். ஒவ்வொரு கிராமத்திலும் போதிய இடங்கள் (2–3) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவை அந்தக் கிராமத்தின் நிலத்தடி நீர்மட்டத்தை அறிய உதவும்.

இந்தச் செயலியானது, சரியான தரவுகளுடன் பஞ்சாயத்துகளின் பணிகளை எளிதாக்குவதற்கு பயன்படுத்தப்படும். நிலத்தடிநீர் தரவுகள், கிராமப்பஞ்சாயத்து வளர்ச்சித்திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டங்களின் ஒருபகுதியாக செயல்படுத்தப்படும். நீர்நிலைகளை மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல், காடுகள் வளர்ப்பு, மழைநீர் சேகரிப்பு போன்ற திட்டங்களின்மூலம், கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் நீர் மேலாண்மையை செயல்படுத்துவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

---

**2. 5ஜி சேவைகள்: அக்.1இல் பிரதமர் தொடக்கம்**

இந்தியாவில் அதிவேக இணைய வசதியை அளிக்கும் 5ஜி சேவையை அக்.1–ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைக்கவிருப்பதாக நடுவண் தகவல் தொடர்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தில்லியில் அக்.1 முதல் 4 வரை இந்திய கைப்பேசி மாநாடு நடைபெறவுள்ளது. முதல்நாளில் 5ஜி சேவையை பிரதமர் மோதி தொடக்கிவைக்கவுள்ளதாக, நடுவண் தகவல் தொடர்புத்துறையின் தேசிய அகண்ட அலைவரிசை இயக்கம் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளது.

---

**3. 'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்துக்கு தனி இணையதளம்**

'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்துக்கு தனி இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வண்டலூரில் தொடக்கிவைத்தார். இந்த இயக்கத்தின் தொடக்க கட்டமாக, நிகழாண்டில் 2.80 கோடி மரக்கன்றுகள் நடப்படும். தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33%ஆக உயர்த்த பசுமைத்தமிழ்நாடு இயக்கத்தை ஏற்படுத்துவதற்கான அறிவிப்பு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்:** 'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்தின்கீழ், அடுத்த பத்தாண்டு காலத்தில் நகர்ப்புற பகுதிகள், விவசாயப்பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலங்கள், ஏரிக்கரைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், ஆற்றுப்படுகைகள், பிற பொது நிலங்களில் உள்ளூர் மரவகைகள் நடப்படும். மேலும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் உயர்ரக மரங்களான சந்தனம், செம்மரம் மற்றும் ஈட்டிமரம் போன்ற மரங்களை வளர்க்க, 'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்தின்கீழ் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.

'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்துக்காக பல்வேறு மாவட்டங்களில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நாற்றங்கால்கள் மூலமாக, 2.80 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன. நாற்றுகளின் தேவை மற்றும் நாற்றங்கால்களைக் கண்காணிக்க, பசுமைத்தமிழ்நாடு இயக்கத்துக்காக www.greentnmission.com என்ற தனி இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

மரக்கன்றுகளின் நடவு, பிழைப்புத் திறன் போன்றவற்றைக் கண்காணிப்பதற்கு அனைத்து நடவு இடங்களின் விவரங்கள் புவிக்குறியீடு தரவுகளுடன் சேகரிக்கப்படுகின்றன.

---

**4. 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் 8 ஆண்டுகாலம் நிறைவு: அந்நிய நேரடி முதலீடு ₹6.27 இலட்சம் கோடியாக இரட்டிப்பு**

பிரதமர் நரேந்திர மோதியின் முதல் முன்முயற்சியான, 'இந்தியாவில் தயாரிப்போம்' (மேக் இன் இந்தியா) திட்டம் தொடங்கப்பட்டு செப்.25ஆம் தேதியுடன் எட்டு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் இந்தத் திட்டத்தில் 2021–22 நிதி ஆண்டில் ₹6,27,000 கோடி ($83 பில்லியன் டாலர்) அந்நிய நேரடி முதலீடு கிடைத்துள்ளதாக நடுவண் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 8 ஆண்டுகால சீர்திருத்த நடவடிக்கைகளில் இது இரட்டிப்பு வளர்ச்சி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டை எளிதாக்குவதற்கான வசதிகள், புத்தாக்க ஊக்குவிப்பு, திறன் மேம்பாடு, சிறந்த உற்பத்தி உள்கட்டமைப்பு போன்ற நோக்கங்களுடன், 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் உருவானது. பிரதமர் நரேந்திர மோதியின் தலைமையின்கீழ் ஆட்சியமையப்பட்டு 2014ஆம் ஆண்டு இந்த, 'மேக் இன் இந்தியா' திட்டம் அறிவிக்கப்பட்டது. புதிய இந்தியாவின் வளர்ச்சிப்பாதையில் நாட்டை உலகளாவிய அளவில் ஒரு முன்னணி உற்பத்தி, முதலீட்டு இடமாக உருவாக்கும் நோக்கத்துடன் உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள் இந்தியாவுடன் இணைந்து செயல்பட அழைப்பு விடுக்கப்பட்டது. தற்போது இதில் நிகழ்ந்துள்ள சாதனைகளை நடுவண் வர்த்தகம், தொழிற்துறை அமைச்சகம் சார்பில் வைக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு: நடுவணரசின் முதன்மைத் திட்டமான, 'மேக் இன் இந்தியா' நாட்டை ஒரு முன்னணி உற்பத்தி முதலீட்டு இடமாக உருவாக்கி இருக்கின்றது. உற்பத்தி, சேவைத்துறை உள்ளிட்ட 27 துறைகளில் இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க அளவில் சாதனைகளை புரிந்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, இந்திய அரசு ஒரு தாராளமயமான, வெளிப்படையான கொள்கையை வகுத்தது. இதன் விளைவு இந்தத் துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை தங்குதடையின்றி பெறமுடிந்தது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் அந்நிய நேரடி முதலீடுகள் 2014–15 நிதியாண்டில் ₹2,75,415 கோடியாக ($45.15 பில்லியன் அமெரிக்க டாலர்) இருந்தது. இக்கொள்கை அறிவிப்புக்குப் பின்னர் தொடர்ந்து அதிகரித்து 2021–22ஆம் நிதியாண்டில் நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான அந்நிய நேரடி முதலீடாக ₹6,27,000 கோடியாக ($83.6 பில்லியன் டாலர்கள்) கிடைத்துள்ளது. இந்த FDI சுமார் 101 நாடுகளில் இருந்து வந்துள்ளன. இது 31 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் 57 துறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் நாட்டை விருப்பத்தக்க முதலீட்டிடமாக மாற்ற சமீபத்தில் அரசு பொருளாதார சீர்திருத்தங்கள், வணிகத்தை எளிதாக்குதல் போன்ற நடவடிக்கைகள்மூலம், நிகழ் நிதியாண்டில் ₹7,50,000 கோடி ($100 பில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்புள்ள அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கும் பாதையிலும் நாடு உள்ளது.

நாட்டின் 14 முக்கிய உற்பத்தி துறைகளில் உற்பத்தியுடன் கூடிய ஊக்குவிப்புத் திட்டம் (பிஎல்ஐ) அறிவிக்கப்பட்டு இதன்மூலம் 'மேக் இன் இந்தியா' ஊக்கம் பெற்றுள்ளது. முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஒப்புதல்கள், அனுமதிகளுக்கு ஒற்றைசாளர முறையில் வணிகத்தை எளிதாக்குவதை மேம்படுத்த, 'தேசிய ஒற்றைச்சாளர அமைப்பு' கடந்தாண்டு இதே மாதம் தொடங்கப்பட்டது. இந்த வலைத்தளத்தில் ஒன்றிய–மாநில அரசுகளின் பல்வேறு அமைச்சகங்கள், துறைசார்ந்த அமைப்புகளை ஒருங்கிணைக்கப்பட்டு முதலீட்டாளர்கள் பயன்பட்டுள்ளனர்

'மேக் இன் இந்தியா' பார்வையின் மற்றொரு வெளிப்பாடாக, 'ஒரு மாவட்டம்–ஒரு தயாரிப்பு' என்ற முன்முயற்சி உற்பத்தியாளர்களுக்கு உலகளாவிய தளத்தை வழங்கி வருகின்றது. இதன்மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளின் சமூக–பொருளாதார வளர்ச்சி மேன்மையடைந்து வருகின்றது. இந்தியாவில் வணிகம் செய்யும் முதலீட்டாளர்களுக்–கு, தேசத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிக்கும் வகையில், இந்தத்திட்டத்தின்மூலம் அரசு முயற்சி செய்து வருகிறது. இதன் விளைவாக நாட்டில் பொம்மைகள் இறக்குமதி பெருவாரியாக குறைந்தது. கடந்த 2013 ஆண்டைவிட நிகழ் நிதியாண்டில் 636 சதவீதம் பொம்மைகள் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. கடந்த 2018–19ஆம் நிதியாண்டில் மொம்மை ஏற்றமதி ₹1612 கோடியாக இருக்க 2021–22 நிதியாண்டில் ₹2,601.5 கோடியாக அதிகரித்துள்ளது. இது பலவிதமான சீர்திருத்தங்கள் முதலீடு அதிகரிப்பு போன்றவைகள்மூலம் வளர்ச்சிக்கு வழிவகுத்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. சப்தகோசி அணை திட்டத்தை முன்னெடுக்க இந்தியா–நேபாளம் முடிவு**

வெள்ளத்தடுப்பு, நீர்மின்னுற்பத்தி உள்ளிட்டவற்றுக்கு வழிவகுக்கும் சப்தகோசி அணை திட்டப்பணிகளை முன்னெடுப்பதற்கு இந்தியாவும் நேபாளமும் முடிவெடுத்துள்ளன.

இந்தியா–நேபாளம் இடையேயான நீர்வளங்கள் கூட்டுக்குழுவின் ஒன்பதாவது கூட்டம் நேபாளத்தின் தலைநகரம் காத்மாண்டு நகரத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஜல் சக்தி அமைச்சகத்தின் நீர்வளத்துறைச்செயலர் பங்கஜ் குமார் தலைமையிலான இந்தியக்குழு பங்கேற்றது. நேபாள நீர்வளத்துறை அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

இரு நாடுகளுக்கிடையேயான நீர்ப்பகிர்வு குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. முக்கியமாக, மகாகாளி ஆற்றுநீர் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், சப்தகோசி அணை திட்டத்தை விரைந்து முன்னெடுப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நேபாளத்தில் உற்பத்தியாகி பிகார் வழியே இந்தியாவுக்குள் நுழையும் சப்தகோசி ஆற்றில் அணை கட்டுவது தொடர்பான பணிகளை முன்னெடுக்க கூட்டத்தின்போது முடிவெடுக்கப்பட்டது. அணை கட்டுமானம் சார்ந்த பணிகள், நீர்த்தேக்கப்பகுதிகள், சமூக, சுற்றுச்சூழல் தாக்கங்கள் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக இருநாடுகளின் நிபுணர்கள் குழுவும் விரைவில் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாகாளி ஆற்றுநீர் ஒப்பந்தம் இந்தியா–நேபாளம் இடையே கடந்த 1996–ஆம் ஆண்டில் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின்கீழ் மகாகாளி ஆறு, அதன் கிளைநதிகள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. வெள்ளத்தடுப்பு மற்றும் மேலாண்மைக்கான கூட்டுக்குழு, கோசி–கண்டக் திட்டத்துக்கான கூட்டுக்குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது.

---

**6. நாட்டில் அதிகரிக்கும் வேலையின்மை பிரச்னை...**

நாட்டில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான இளையோர் பட்டப்படிப்பை முடித்து கல்லூரியைவிட்டு வெளியேறுகி–ன்றனர். ஆனால், அதற்கேற்ப பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புகள் உருவாகுவதில்லை. புதிய முதலீடுகளை ஈர்த்து, அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஒன்றிய, மாநில அரசுகளுக்குப் பெரும் சவாலாகவே உள்ளது. நாட்டில் நிலவும் வேலையின்மை விகிதம் குறித்து இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் (அனைத்துத் தரவுகளும் சதவீதத்தில்)

**கடந்த ஓராண்டில் வேலையின்மை விகிதம்**

| மாதம் | இந்தியா | நகர்ப்புறம் | கிராமப்பகுதிகள் |
|---|---|---|---|
| ஆகஸ்ட்–2022 | 8.28% | 9.57% | 7.68% |
| ஜூலை–2022 | 6.83% | 8.22% | 6.17% |
| ஜூன்–2022 | 7.83% | 7.32% | 8.07% |
| மே–2022 | 7.14% | 8.24% | 6.63% |
| ஏப்ரல்–2022 | 7.83% | 9.22% | 7.18% |
| மார்ச்–2022 | 7.57% | 8.28% | 7.24% |
| பிப்ரவரி–2022 | 8.11% | 7.57% | 8.37% |
| ஜனவரி–2022 | 6.56% | 8.14% | 5.83% |
| டிசம்பர்–2021 | 7.91% | 9.30% | 7.28% |
| நவம்பர்–2021 | 6.97% | 8.20% | 6.41% |
| அக்டோபர்–2021 | 7.74% | 7.37% | 7.91% |
| செப்டம்பர்–2021 | 6.86% | 8.64% | 6.04% |

**ஆகஸ்டில் மாநில வாரியாக வேலையின்மை விகிதம்**

| | | |
|---|---|---|
| ஆந்திரம் – 6% | தில்லி – 8.2% | ஹரியானா – 37.3% |
| பிகார் – 12.8% | கோவா – 13.7% | ஹிமாச்சல பிரதேசம் – 7.3% |
| சத்தீஸ்கர் – 0.4% | குஜராத் – 2.6% | ஜார்க்கண்ட் – 17.3% |

| | | |
|---|---|---|
| ஜம்மு–காஷ்மீர் – 32.8% | மேகாலயம் – 2% | தெலங்கானா – 6.9% |
| கர்நாடகம் – 3.5% | ஒடிஸா – 2.6% | திரிபுரா – 16.3% |
| கேரளம் – 6.1% | பஞ்சாப் – 7.4% | உத்தர பிரதேசம் – 3.9% |
| மத்திய பிரதேசம் – 2.6% | இராஜஸ்தான் – 31.4% | மேற்கு வங்கம் – 7.4% |
| மகாராஷ்டிரம் – 2.2% | தமிழ்நாடு – 7.2% | |

**கடந்த மே முதல் ஆகஸ்ட் வரையிலான வேலையின்மை விகிதம்**

| | |
|---|---|
| இந்தியா | 7.43% |
| நகர்ப்புறம் | 7.8% |
| கிராமப்பகுதிகள் | 7.2% |
| ஆண்கள் | 6.6% |
| பெண்கள் | 15.2% |
| நகர்ப்புற ஆண்கள் | 6.7% |
| நகர்ப்புற பெண்கள் | 21.6% |
| கிராமப்புற ஆண்கள் | 6.5% |
| கிராமப்புற பெண்கள் | 13% |

**வயதுவாரியான வேலையின்மை விகிதம்**

| | | |
|---|---|---|
| 15–19 – 58% | 35–39 – 1% | 55–59 – 0.5% |
| 20–24 – 44% | 40–44 – 0.5% | 60–64 – 0.5% |
| 25–29 – 12.5% | 45–49 – 0.5% | |
| 30–34 – 2.5% | 50–54 – 0.5% | |

**கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலையின்மை விகிதம்**

| | |
|---|---|
| 5–ஆம் வகுப்பு வரை – 1% | 10–12–ஆம் வகுப்பு – 10.7% |
| 6–9–ஆம் வகுப்பு – 1.8% | பட்டப்படிப்பு – 17.4% |

**1. மாதிரிப் பதிவு அமைப்பு அறிக்கை – 2020இன்படி, 2018–20இல் இந்தியாவில் குறைவான பாலின விகிதத்தை கொண்டிருந்த மாநிலம் எது?**

அ. பீகார்

ஆ. உத்தர பிரதேசம்

இ. ஹரியானா

**ஈ. உத்தரகாண்ட் ☑**

✓ இந்தியத் தலைமைப் பதிவாளர் வெளியிட்ட மாதிரிப் பதிவு அமைப்பின் புள்ளிவிவர அறிக்கை–2020இன்படி, உத்தரகாண்டின் பிறப்பு பாலின விகிதம் நாட்டிலேயே மிகமோசமாக 844ஆகக் கண்டறியப்பட்டது. பாலின விகிதம் என்பது 1,000 ஆண் குழந்தைகளுக்கு இருக்கும் பெண் குழந்தைகளின் விகிதமாகும். கேரளத்தின் விகிதம் 974 ஆக சிறப்பாக உள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த பிறப்பு பாலின விகிதம் 2017–19இல் 904ஆக இருந்து 2018–20 இல் மூன்று புள்ளிகள் அதிகரித்து 907ஆக உள்ளது என்று அவ்வறிக்கை கூறியது. இது கிராமப்புறங்களில் 907 ஆகவும், நகர்ப்புறங்களில் 910 ஆகவும் உள்ளது.

**2. 'ஸ்வச் டாய்கேத்தான்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**




ஆ. கல்வி அமைச்சகம்


இ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம்

ஈ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது சமீபத்தில் ஸ்வச் அம்ருத் மகோத்சவத்தின்கீழ், 'ஸ்வச் டாய்கேத்தனை' அறிமுகப்படுத்தியது. இப்போட்டியானது பொம்மைகளுக்கான தேசிய செயல் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் இயக்கத்தின் இரண்டாம் கட்டம் (SBM 2.0) ஆகியவற்றுக்கு இடையேயான ஓர் ஒருங்கிணைப்பாக உள்ளது. பொம்மைகளைத் தயாரிப்பதில் கழிவுகளைப் பயன்படுத்துவதற்கான தீர்வுகளை ஆராய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஐஐடி காந்திநகரில் உள்ள படைப்பாக்க கற்றல் மையம், இத்திட்டத்திற்கான அறிவுப்பங்காளராக உள்ளது.

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, ஆபரேஷன் 'மேகா சக்ரா' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ. இந்திய இராணுவம்



**ஆ. நடுவண் புலனாய்வுப் பணியகம் ☑**

இ. இந்திய கடலோர காவல்படை

ஈ. மத்திய விஜிலென்ஸ் ஆணையம்

✓ 'மேகா சக்ரா' நடவடிக்கையின் ஒருபகுதியாக, நடுவண் புலனாய்வுப்பிரிவு (CBI) 19 மாநிலங்களில் 56 இடங்களிலும், ஒரு யூனியன் பிரதேசத்திலும் சிறுவர் பாலியல் வன்கொடுமை சம்பந்தப்பட்ட காணொளிகளை இணையதளத்தில் தரவேற்றம் மற்றும் தரவிறக்கம் செய்தது தொடர்பான இரண்டு வழக்குகள் தொடர்பாக சோதனை நடத்தியது. சிங்கப்பூர் இன்டர்போலின் தரவுகள் மற்றும் இணையதளத்தில் சிறுவர் பாலியல் வன்கொடுமை சம்பந்தப்பட்ட காணொளிகளை விற்பனை செய்தோருக்கு எதிராக கடந்த ஆண்டு நடத்தப்பட்ட, 'ஆபரேஷன் கார்பன்'போது பெறப்பட்ட உளவுத்துறையின் தகவல்கள் அடிப்படையில் இந்த சமீபத்திய சோதனைகள் நடத்தப்பட்டன.

**4. சாம்பலைப் பயன்படுத்தி காண்டாமிருகங்களுக்காக உருவாக்கப்பட்ட, 'ஒற்றைக்கொம்பிகளின் உறைவிடம்' என்ற நினைவிடத்தை உருவாக்கியுள்ள மாநிலம் எது?**



அ. மேற்கு வங்கம்

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. ஒடிஸா

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள காசிரங்கா தேசியப்பூங்காவில் அஸ்ஸாம் மாநில அரசால் எரிக்கப்பட்ட காண்டாமிருக கொம்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட சாம்பலைப்பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மூன்று காண்டாமிருகங்களின் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. ஓராண்டுக்கு முன், உலக காண்டாமிருக நாளன்று, வேட்டைக்காரர்கள் மற்றும் சட்டவிரோத வியாபாரிகளிடமிருந்து பாதுகாப்பு அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட சுமார் 2500 காண்டாமிருக கொம்புகளை அஸ்ஸாம் மாநில அரசு எரித்துச்சாம்பலாக்கியது. மூன்று காண்டாமிருக சிற்பங்களைக்கொண்ட இந்த நினைவுச்சின்னத்திற்கு, 'ஒற்றைக்கொம்பிகளின் உறைவிடம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**5. சமீபத்திய ஆய்வின்படி, கூட்டாக 12 மில்லியன் டன் உலர் கார்பனைக் கொண்டிருக்கின்ற உயிரினம் எது?**



அ. கொசுக்கள்

**ஆ. எறும்புகள் ☑**

இ. தேனீக்கள்

ஈ. பட்டாம்பூச்சிகள்

✓ ஓர் அண்மைய ஆய்வின்படி, உலகம் முழுவதும் உள்ள எறும்புகள் மொத்தமாக சுமார் பன்னிரண்டு மில்லியன் டன் உலர் கரிமத்தைக் கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதும் உள்ள எறும்புகளின் எண்ணிக்கை சுமார் இருபது குவாட்ரில்லியன் அல்லது இருபதாயிரம் மில்லியன் மில்லியன்கள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவை கூட்டாக காட்டுப்பறவைகள் மற்றும் பாலூட்டிகளைவிட அதிக எடை கொண்டவையாக இருக்கும்.

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சுப்ரோதோ கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**




அ. ஹாக்கி

**ஆ. கால்பந்து ☑**

இ. மட்டைப்பந்து

ஈ. பூப்பந்து

✓ சுப்ரோதோ கோப்பைக்கான சர்வதேச கால்பந்து போட்டியின் 61ஆவது பதிப்பு ஈராண்டு இடைவெளிக்குப்பிறகு தொடங்கியது. நாடு முழுவதுமுள்ள பள்ளிகளுக்கு இது மிகவும் மதிப்புமிக்க கால்பந்துப் போட்டியாக கருதப்படுகிறது. இந்தப் போட்டியை இந்திய வான்படையுடன் இணைந்து சுப்ரோதோ முகர்ஜி விளையாட்டுக் கல்விச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவின் 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தம் 92 பள்ளிகள் மற்றும் வங்காளதேசத்தின் வான்படை பள்ளி ஆகியவை இப்போட்டியில் போட்டியிடுகின்றன.

**7. 2023 ஜன.1 வரை அனைத்து வகையான பட்டாசுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கு தடைவிதிப்பதாக அறிவித்த மாநிலம்/யூடி எது?**



அ. மகாராஷ்டிரா **ஆ. புது தில்லி ☑**

இ. சிக்கிம் ஈ. ஹிமாச்சல பிரதேசம்

✓ அனைத்து வகையான பட்டாசுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டுக்கான தடை 2023 ஜனவரி.1 வரை நீட்டிக்கப்படும் என தில்லி சுற்றுச்சூழலமைச்சர் கோபால் ராய் அறிவித்தார். பண்டிகை காலங்களில் மாசுபாட்டைக்

கட்டுப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இணையதளத்தில் பட்டாசு விற்பனைக்கும் தடைநீட்டிக்கப்பட்டுள்ளது. இத்தடையை கடுமையாக அமல்படுத்துவதை உறுதிசெய்வதற்கான செயல்திட்டம் வரையப்படவுள்ளது. 'ஆம் ஆத்மி' கட்சி பட்டாசு வெடிப்பதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 'படகே நகி தியே ஜலாவ்' என்ற பிரச்சாரத்தையும் தொடங்கியது.

**8. 'கலாச்சாரத்திற்கான சிறந்த இடத்திற்கான' சர்வதேச சுற்றுலா விருதை பெற்ற மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. மேற்கு வங்கம் ☑**

ஈ. ஜம்மு காஷ்மீர்



✓ ஐநா உலக சுற்றுலா அமைப்பின் துணை அமைப்பான பசிபிக் ஏரியா டிராவல் ரைட்டர்ஸ் அசோசியேஷன், மேற்கு வங்காளத்திற்கு 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச பயண விருதை, 'கலாச்சாரத்திற்கான சிறந்த இடம்' என்ற தலைப்பில் வழங்கவுள்ளது. பெர்லினில் நடைபெறும் உலக சுற்றுலா மற்றும் வான்போக்குவரத்து தலைமைகளின் உச்சிமாநாட்டில் இவ்விருது வழங்கப்படும். UNESCO பாரம்பரிய தகுதி மேற்கு வங்கத்தின் துர்கா பூஜைக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது.

**9. திருநங்கையருக்காக பிரத்யேகமாக, 'ரெயின்போ சேமிப்புக்கணக்கை' அறிமுகப்படுத்திய இந்திய வங்கி எது?**

**அ. ESAF சிறு நிதி வங்கி ☑**

ஆ. AU சிறு நிதி வங்கி

இ. YES வங்கி

ஈ. கோடக் மஹிந்திரா வங்கி

ESAF
ESAF SMALL FINANCE BANK
Joy of Banking

✓ ESAF சிறு நிதி வங்கி திருநங்கைகளுக்காக பிரத்யேகமாக, 'ரெயின்போ சேமிப்புக்கணக்கை' அறிமுகப்படுத்தியது. அதிக சேமிப்பு விகிதம் மற்றும் மேம்பட்ட கடனட்டை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களை இந்தக் கணக்கு வழங்குகிறது. கேரளாவைச் சார்ந்த இந்த நிறுவனம், கடந்த 2017இல் ஒரு சிறு நிதிய வங்கியாக நிறுவப்பட்டது.

**10. UNESCOஇன் உலக பாரம்பரிய தளமான மொகஞ்சதாரோ அமைந்துள்ள நாடு எது?**

அ. இந்தியா

ஆ. ஆப்கானிஸ்தான்

**இ. பாகிஸ்தான் ☑**

ஈ. கஜகஸ்தான்



✓ UNESCOஇன் உலக பாரம்பரிய தளமாக விளங்கும் மொகஞ்சதாரோவின் இடிபாடுகள் பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் சிந்து ஆற்றுக்கருகில் அமைந்துள்ளது. முன்னெப்போதும் இல்லாத பருவமழைக்காலம் காரணமாக பாகிஸ்தானில் நூற்றுக்கணக்கான மக்கள் மாண்டனர். இந்தச் சூழ்நிலை, 1922இல் கண்டுபிடிக்கப்பட்ட 4,500 ஆண்டுகளுக்கு முந்தைய மொகஞ்சதாரோ தொல்பொருள் தளத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2020 – தாதா சாஹேப் பால்கே விருது வழங்கி ஆஷா பரேக் கௌரவிக்கப்படவுள்ளார்.**

202ஆம் ஆண்டுக்கான தாதா சாஹேப் பால்கே விருது பிரபல திரைப்பட நடிகை ஆஷா பரேக் பெறுவதாக நடுவண் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. புது தில்லியில் நடைபெறும் தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்படும்.

ஆஷா பரேக் புகழ்பெற்ற திரைப்பட நடிகை, இயக்குனர், தயாரிப்பாளர் இவற்றுடன் இந்திய செவ்வியல் நடனக் கலைஞருமாவார். 1992இல் பரேக், 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1998 முதல் 2001 வரை நடுவண் திரைப்பட சான்றிதழ் வாரியத்தின் தலைவராக அவர் பணியாற்றியுள்ளார்.

---

**2. காலாண்டு வேலைவாய்ப்பு கணக்கெடுப்பின் நான்காவது சுற்று (ஜனவரி–மார்ச், 2022) தகவல் அறிக்கை வெளியிடப்பட்டது.**

நிறுவனம்சார்ந்த வேலைவாய்ப்புகுறித்த அகில இந்திய காலாண்டு ஆய்வின் ஒருபகுதியாக காலாண்டு வேலை வாய்ப்பின் நான்காவது சுற்றுபற்றிய ஆய்வறிக்கையை நடுவண் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெளியிட்டார்.

உழவுசாராத துறைகளில் உள்ள மொத்த வேலைவாய்ப்பில் பெரும்பங்காற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 துறைகளில் முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைசாரா வேலைவாய்ப்புகுறித்த தகவல்களைக் காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு அக்கைகள் தொடர்ந்து வழங்குகின்றன. உற்பத்தி, கட்டுமானம், வர்த்தகம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், உணவகம் மற்றும் தங்குமிடங்கள், தகவல் தொழில்நுட்பம் / பிபிஓ மற்றும் நிதி சேவைகள் ஆகியவை இந்த ஒன்பது துறைகளாகும்.

நிறுவனம் சார்ந்த வேலைவாய்ப்புகுறித்த அகில இந்திய காலாண்டு ஆய்வு, இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, "காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு", இரண்டாவதாக, "பகுதி திட்ட அமைப்பு ஆய்வு". காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு என்பது பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்டதும், இரண்டாவது ஆய்வு, ஒன்பது அல்லது அதற்கும் குறைவான பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் பற்றியதுமாகும்.

பொருளாதாரத்தின் முறைப்படுத்தப்பட்ட துறைகளில் வேலைவாய்ப்பு மற்றும் அதுசம்பந்தமான முக்கிய தகவல்களை திரட்டுவதற்காக அகில இந்திய காலாண்டு ஆய்வின் ஒருபகுதியாக காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு ஏப்ரல், 2021இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு காலண்டிலும் சுமார் 12000 அமைப்புகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன. இவ்வாறு, முதன்முதலில் 2021 ஏப்ரல்–ஜூன் காலத்திற்கான அறிக்கை, 2021 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

பொருளாதாரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் வேலைவாய்ப்பு நிலவரம் அதிகரித்து வருவதாக நான்காவது காலாண்டு அறிக்கையை வெளியிடுகையில், நடுவண் அமைச்சர் தெரிவித்தார். மூன்றாம் காலாண்டில் (செப்டம்பர்–டிசம்பர் 2021) 3.14 கோடியாக இருந்த மதிப்பிடப்பட்ட வேலைவாய்ப்பு, நான்காவது காலாண்டில் (ஜனவரி–மார்ச், 2022) 3.18 கோடியாக உயர்ந்தது. ஆறாவது பொருளாதாரக்கணக்கெடுப்பில் (2013–2014) இத்தேர்ந்தெடுக்கப்பட்ட 9 துறைகளில் மொத்த வேலைவாய்ப்பின் அளவு 2.37 கோடியாக பதிவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கை என்பது, விநியோகம் மற்றும் தேவை குறித்த ஆய்வாகும். அதாவது குறிப்பிட்ட கால அளவிற்கான தொழிலாளர் ஆய்வு என்பதால் நாட்டில் வேலைவாய்ப்புகுறித்த தரவு இடைவெளிகளை இது குறைக்கும்.

**நான்காவது காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கையின் முக்கிய அம்சங்கள்:**

• 3ஆவது காலாண்டில் 3.14 கோடி பணியாளர்கள் பணியாற்றியதுடன் ஒப்பிடுகையில், நான்காவது காலாண்டில் 5.31 இலட்சம் நிறுவனங்களில் மொத்தம் 3.18 கோடி தொழிலாளர்கள் பணிபுரிந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

• பணியாளர்களின் மொத்த எண்ணிக்கையில் உற்பத்தித்துறை முதலிடமும் (38.5%), அதைத்தொடர்ந்து 21.7% உடன் கல்வித்துறையும், 12% உடன் தகவல் தொழில்நுட்பம் / பிபிஓ துறையும், 10.6% உடன் சுகாதாரத் துறையும் உள்ளன.

• 1.4% நிறுவனங்களில் மட்டுமே குறைந்தபட்சம் 500 பேர் பணியாற்றினார்கள். இதுபோன்ற மிகப்பெரிய அமைப்புகள் பெரும்பாலும் தகவல் தொழில்நுட்பம் / பிபிஓ மற்றும் சுகாதாரத் துறையில் இயங்குகின்றன.

• மூன்றாவது காலாண்டில் 31.6%ஆக இருந்த பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை, நான்காவது காலாண்டு அறிக்கையில் 31.8%ஆக, சற்று உயர்ந்தது. இருப்பினும், சுகாதாரத்துறையில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 52%ஆக இருந்தது. அதைத்தொடர்ந்து கல்வி, நிதி சேவை மற்றும் தகவல் தொழில்நுட்பம்/பிபிஓ துறைகளில் முறையே 44%, 41% மற்றும் 36%ஆக பதிவானது. சுயதொழில் புரியும் ஆண்களைவிட நிதி சேவை துறையில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகம் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விஷயம்.

---

**1. 2026ஆம் ஆண்டுக்குள் தேசிய மாசற்ற காற்றுத் திட்டத்தின்கீழ், நகரங்களில் துகள்மப்பொருள்களின் செறிவைக் குறைப்பதற்கான புதிய இலக்கு சதவீதம் என்ன?**

அ. 25%

ஆ. 30%

**இ. 40% ☑**

ஈ. 50%




✓ 2026ஆம் ஆண்டுக்குள் தேசிய மாசற்ற காற்றுத் திட்டத்தின் (NCAP) கீழுள்ள நகரங்களில் துகள்மப்பொருள்களின் செறிவை 40 சதவீத அளவுக்குக் குறைக்க நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகம் புதிய இலக்கை நிர்ணயித்துள்ளது. இதற்கு முன்னர் 2024ஆம் ஆண்டுக்குள் 20 – 30% அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இருபது நகரங்கள் ஆண்டு சராசரி செறிவான (ஒரு கன மீட்டருக்கு 60 மைக்ரோகிராம்) PM10 என்ற தேசிய தரநிலைகளைச் சந்தித்துள்ளன.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'IinvenTiv' நிகழ்வு என்றால் என்ன?**

அ. வேலைவாய்ப்பு முகாம்

**ஆ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முகாம் ☑**

இ. திறன் மேம்பாட்டு முகாம்

ஈ. துளிர் நிறுவல்கள் முகாம்




✓ இருபத்து மூன்று இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IITs) இணைந்து, "IinvenTiv" என்ற ஒரு பிரம்மாண்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முகாமை ஏற்பாடு செய்யும். இந்த நிகழ்வு அந்நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் புதுமைத்திட்டங்களைப்பற்றிய முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புத்தாக்கங்களின் சிறந்த மேம்பாட்டிற்காக பல்கலைகள் மற்றும் நிறுவனங்கள், தொழிற்துறை மற்றும் ஐஐடிகளுடன் அம்முகாம் ஒத்துழைக்கும்.

**3. 'தேசிய ஊழல் எதிர்ப்பு ஆணைய மசோதா'வுடன் தொடர்புடைய நாடு எது?**

அ. அமெரிக்கா

ஆ. இந்தியா

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. பாகிஸ்தான்



✓ ஆஸ்திரேலியாவின் தலைமை வழக்கறிஞர் அண்மையில் தேசிய ஊழல் தடுப்பு ஆணைய மசோதாவை தாக்கல் செய்தார். தேசிய ஊழல் தடுப்பு ஆணையம் என்பது பொதுத்துறையில் உள்ள தீவிரமான அல்லது முறையான ஊழலை விசாரித்து அறிக்கையளிக்கும் ஓர் அமைப்பாகும். இது ஒரு ஆணையரால் வழிநடத்தப்படும்; அவர், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு பதவி வகிப்பார். பொதுநலவாய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள், பொதுநலவாய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள், அரசாங்க ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள், பாதுகாப்புப்படை உறுப்பினர்கள், சட்டப்பூர்வ அலுவலகம் வைத்திருப்பவர்கள் உள்ளிட்டோரை விசாரிப்பதற்கான பரந்த அதிகார வரம்பு இந்தத் தேசிய ஊழல் தடுப்பு ஆணையத்திற்கு உள்ளது.

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற தாமிரபரணி ஆறு முதன்மையாகப் பாயும் மாவட்டங்கள் எவை?**

**அ. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ☑**

ஆ. மதுரை மற்றும் சிவகங்கை

இ. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி

ஈ. சேலம் மற்றும் ஈரோடு



✓ தாமிரபரணி ஆறு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேற்குத்தொடர்ச்சிமலையின்கண் பொதிகை மலையிலிருந்து உற்பத்தியாகிறது. பெங்களூருவைச் சேர்ந்த அசோகா ஆராய்ச்சி மற்றும் சுற்றுச்சூழலுக்கான அறக்கட்டளையின் (ATREE) ஆராய்ச்சியாளர்கள் தாமிரபரணி ஆற்றின் மறுசீரமைப்புப் பணியை, 'தாமிரசெஸ்' என்ற திட்டத்தின்கீழ் தொடங்கினர். பூர்வீக பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துதற்கான சேவைகளை செயல்படுத்துவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 5. 'ஜல்தூத்' என்ற செயலியை உருவாக்கியுள்ள நடுவண் அமைச்சகம் அல்லது அமைச்சகங்கள் எது / எவை?

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம் ☑**

இ. ஜல்சக்தி அமைச்சகம்

ஈ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்




✓ 'ஜல்தூத்' என்ற செயலியை நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகமும் நடுவண் பஞ்சாயத்து இராஜ் அமைச்சகமும் இணைந்து உருவாக்கியுள்ளது. ஒரு கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தைக் கண்டுபிடிக்க இந்தச் செயலி நாடு முழுவதும் பயன்படுத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை ஆண்டுக்கு இருமுறை (பருவமழைக்கு முந்தையது மற்றும் பிந்தையது) காலங்களில் அளவிடுவதற்கான வேலைவாய்ப்புக்கு 'ஜல்தூத்' செயலி உதவும். நீர்மட்டத்தை அளவிட நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், நிலக்குறியீடிடப்பட்ட (geo–tagged) நிழற்படங்களை இந்தச் செயலியின்மூலம் பதிவேற்றுவார்கள்.

### 6. NTPCஆல் சமீபத்தில் கையகப்படுத்தப்பட்ட ஜபுவா மின்னுற்பத்தி நிலையம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. இராஜஸ்தான்

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. பஞ்சாப்

ஈ. சத்தீஸ்கர்

✓ இந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த மின்னுற்பத்தியாளரான NTPC, பெருநிறுவன நொடிப்புநிலை தீர்மானச் செயல்முறைமூலம் ₹925 கோடிக்கு ஜபுவா பவர் லிட் (JPL) நிறுவனத்தை வெற்றிகரமாக கையகப்படுத்தியுள்ளது. கொல்கத்தாவில் உள்ள தேசிய நிறுவனச்சட்டத் தீர்ப்பாயம்மூலம் (NCLT) இந்தச் செயல்முறைகள் தொடங்கப்பட்டன. இது NCLT வழிமூலம் NTPC கையகப்படுத்தும் முதல் சொத்தாகும். JPL என்பது மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள 600 மெகாவாட் திறன்கொண்ட செயல்பாட்டில் உள்ள ஓர் அனல்மின்னுற்பத்தி நிறுவனமாகும்.

### 7. 'ஷிக்ஷாக் பர்வ் கூட்டத்தின்' தொடக்க விழாவை நடத்திய நகரம் எது?

அ. பெங்களூரு

**ஆ. புது தில்லி ☑**

இ. வாரணாசி

ஈ. காந்தி நகர்



✓ 'ஷிக்ஷாக் பர்வ்' என்பது ஆசிரியர்களைப் பாராட்டவும் தேசியக் கல்விக் கொள்கை–2020ஐ முன்னெடுத்துச் செல்வதற்காகவும் நடத்தப்பட்ட ஒரு கூட்டமாகும். கல்வி அமைச்சகம், CBSE, AICTE மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் ஆகியவை புது தில்லியில் ஏற்பாடு செய்திருந்த தொடக்க மாநாட்டுடன் 'ஷிக்ஷாக் பர்வ்' ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியில், 'தேசிய மனநல ஆய்வறிக்கை', 'தேசிய அறக்கட்டளை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் ஆய்வறிக்கை' மற்றும் 'குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகளுக்கான ஸ்கிரீனிங் டூல்ஸ் மொபைல் ஆப்–பிரஷாஸ்ட்' ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன.

**8. அண்மையில் காலமான இரண்டாம் எலிசபெத் இராணி, பிரிட்டனின் அரசியாக எத்தனை ஆண்டுகள் இருந்தார்?**

அ. 30

ஆ. 45

இ. 60

ஈ. 70 ☑



✓ அண்மையில் தனது 96ஆவது வயதில் காலமான இரண்டாம் எலிசபெத் மகாராணி, 1952ஆம் ஆண்டு பிரிட்டன் அரச அரியணை ஏறினார். 70 ஆண்டுகள் ஆட்சிசெய்த மிகநீண்ட கால அரசியாக அவர் திகழ்ந்தார். 1837 முதல் 1901 வரை ஆட்சிசெய்த விக்டோரியா மகாராணியின் சாதனையை முறியடித்து, 2015ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் மிக நீண்டகால அரசியாக அவர் ஆனார். அவரது மூத்த மகன் சார்லஸ், அவருக்குப் பிறகு மூன்றாம் சார்லஸ் மன்னராக அரியணை ஏறுகிறார்.


**9. 2023 – ஆடவர் உலகக்கோப்பை ஹாக்கியை நடத்துகிற இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. புது தில்லி

**இ. ஒடிஸா ☑**

ஈ. மகாராஷ்டிரா




✓ 2023 – ஹாக்கி ஆடவர் உலகக்கோப்பைப் போட்டிகளை புவனேசுவரத்தில் உள்ள கலிங்கா மைதானத்திலும், ரூர்கேலாவில் உள்ள பிர்சா முண்டா அரங்கத்திலும் நடைபெறும். 2023 ஜனவரியில் இந்தப்போட்டிகள் தொடங்கும். போட்டியின் டிரா சமீபத்தில் புவனேசுவரத்தில் நடைபெற்றது. கடந்த 2018இல் நெதர்லாந்தைத் தோற்கடித்து முதல் பட்டத்தை வென்றதால், பெல்ஜியம் இவ்வுலகக்கோப்பையின் நடப்புச்சாம்பியனாக உள்ளது. இதில் பங்கேற்கும் இந்தியா, ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 16 அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.


**10. கீழ்க்காணும் எந்நகரத்தில், 'கலாம் நோ கார்னிவல்' என்ற புத்தகக்கண்காட்சியை பிரதமர் தொடக்கி வைத்தார்?**

அ. மும்பை

**ஆ. அகமதாபாத் ☑**

இ. வாரணாசி

ஈ. இராமேசுவரம்



✓ அகமதாபாத்தில் நவபாரத் சாகித்திய மந்திர் ஏற்பாடு செய்திருந்த, 'கலாம் நோ கார்னிவல்' புத்தகக் கண்காட்சியின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோதி உரையாற்றினார். பாரம்பரியமாக நடைபெற்று வரும் இக்கண்காட்சி குஜராத் மாநிலத்தின் இலக்கியம் மற்றும் அறிவை விரிவுபடுத்த பேருதவி புரிகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிரதமரின் ஏழைகள் நல உணவுத்திட்டத்தை மேலும் 3 மாதங்களுக்கு (அக்டோபர் 2022–டிசம்பர்2022) மத்திய அரசு நீடித்துள்ளது.**

கடந்த 2021இல் பிரதமரால் அறிவிக்கப்பட்ட மக்கள் நலத்திட்டமான பிரதமரின் ஏழைகள் நல உணவுத்திட்டத்தின் கீழ், கூடுதல் உணவுப்பாதுகாப்பு வெற்றிகரமாக அமலாவதை அடுத்து இந்த திட்டத்தின் 7ஆவது கட்டத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு அதாவது அக்டோபர் 2022 முதல் டிசம்பர் 2022 வரை நீட்டிக்க நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நலத்திட்டத்தின்மூலம் தேசிய உணவுப்பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பயனடையும் பயனாளிகள் அனைவருக்கும் விலையில்லாமல் ஒவ்வொரு நபருக்கும் மாதம் ஒன்றுக்கு 5 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது. தற்போது மேலும் 3 மாதங்களுக்கு இந்தத் திட்டம் நீடிக்கப்பட்டிருப்பதால் அரசுக்கு ₹44,762 கோடி கூடுதலாக செலவாகும். 7ஆம் கட்டத்திற்கு உணவு தானிய ஒதுக்கீடு 122 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கக்கூடும்.

---

**2. மோதலில் இருந்து பூமியைப் பாதுகாக்கும் திட்டம்: விண்கல்லில் செயற்கைக்கோளை மோதி நாசா சோதனை**

எதிர்காலத்தில் பூமியின்மீது விண்கற்கள் மோதி பேரழிவை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அவற்றின் பாதையை மாற்றியமைக்க முடியுமா? என்பதை தெரிந்துகொள்வதற்காக அத்தகைய விண்கல் ஒன்றின்மீது செயற்கைக்கோள் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான NASA மோதச்செய்தது.

பூமியில் மிகப்பெரிய விண்கற்கள் மோதி மிகப்பெரிய அழிவை ஏற்படுவத்துவதற்கான அபாயத்தை தவிர்ப்பதற்காக NASA விஞ்ஞானிகள் நீண்டகாலமாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒருபகுதியாக, பூமியை நோக்கி வரக்கூடிய விண்கற்களை திசைமாற்றுதற்கான வழிமுறைகளையும் விஞ்ஞானிகள் தேடிவருகின்றனர்.

இந்நிலையில், ஒரு பொருளை விண்கல்லின்மீது பலமாக மோதச்செய்வதன்மூலம் அதன் சுற்றுவட்டப்பாதையை மாற்றியமைக்க முடியுமா? என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, 'தி டபுள் ஆஸ்டிராய்ட் ரிடைரக்ஷன் டெஸ்ட்' (டார்ட்) என்ற சோதனையை NASA மேற்கொண்டது. அந்தச் சோதனைத் திட்டத்தின்கீழ், 160 மீட்டர் விட்டம்கொண்ட டிமார்ஃபோஸ் என்ற விண்கல்மீது செயற்கைக்கோளை மோதச் செய்ய முடிவுசெய்யப்பட்டது. அந்த விண்கல், டிடிமோஸ் என்ற 780 மீ விட்டம் கொண்ட மிகப்பெரிய விண்கல்லுக்கு நிலவாகச் சுற்றிவருகிறது.

இந்த நிலையில், டிமார்ஃபோஸ் மீது மோதுவதற்காக NASA அனுப்பிய செயற்கைக்கோள் 10 மாதங்களுக்குப்பிறகு அந்த விண்கல் மீது மோதிச்சிதறியது.

இந்த மோதலையும் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட மாற்றத்தையும் ஆய்வுசெய்தற்காக, இத்தாலிய விண்வெளி ஆய்வு நிறுவனம் தயாரித்த LICIA கியூப் செயற்கைக்கோள், டார்ட் செயற்கைக்கோளுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது, டார்ட்டிலிருந்து கடந்த 11–ஆம் தேதி தனியாகப் பிரிந்து அதனை பின்தொடர்ந்தது.

டிமார்ஃபோஸ் விண்கலம்மீது டார்ட் செயற்கைக்கோள் மோதுவதையும் அதனால் எழுந்த தூசிமண்டலத்தின் தன்மையையும் LICIA கியூப் செயற்கோள் பதிவுசெய்து பூமிக்கு நேரடியாக அனுப்பி வருகிறது.

இந்தச்சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட விண்கல்லைக் குறிவைத்து, அதன் மீது வேண்டுமென்றே மோதச்செய்து, அதன் பாதையை மாற்றியமைக்கும் திறன் NASAஉக்கு உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

---

**1. எந்த மாநிலத்திற்கு, 2022ஆம் ஆண்டுக்கான, 'ஆயுஷ்மான் உத்கிரிஷ்டா விருது' வழங்கப்பட்டுள்ளது?**

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. கர்நாடகா

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

✓ சுகாதார வசதி பதிவேட்டில் பல்வேறு சுகாதார வசதிகளை சேர்த்ததற்காக உத்தர பிரதேச மாநிலத்திற்கு 2022ஆம் ஆண்டுக்கான, 'ஆயுஷ்மான் உத்கிரிஷ்டா விருது' வழங்கப்பட்டுள்ளது. தேசிய சுகாதார வசதி பதிவேட்டில் 28,728 சுகாதார வசதிகள் சேர்க்கப்பட்டு நாட்டிலேயே சிறப்பாக செயல்படும் மாநிலமாக அது திகழ்கிறது. கிட்டத்தட்ட 2 கோடி ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகளுடன் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை (ABHA) உருவாக்குவதில் இது இரண்டாவது சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

**2. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் (HAL) ஒருங்கிணைந்த கிரையோஜெனிக் எஞ்சின் உற்பத்தி வசதி திறக்கப்பட்ட நகரம் எது?**

அ. திருவனந்தபுரம்

**ஆ. பெங்களூரு ☑**

இ. சிம்லா

ஈ. ஹைதராபாத்



✓ பெங்களூருவில் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் (HAL) ஒருங்கிணைந்த கிரையோஜெனிக் எஞ்சின் உற்பத்தி வசதியை இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு திறந்து வைத்தார். இந்திய ஏவுகலங்களுக்கான கிரையோஜெனிக் (CE20) மற்றும் செமி கிரையோஜெனிக் (SE2000) எஞ்சின்களை தயாரிப்பதற்கான எழுபதுக்கும் மேற்பட்ட உயர்தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் சோதனை வசதிகள் இந்த வசதியில் இடம்பெற்றுள்ளன. கடந்த 2013ஆம் ஆண்டில், HALஇல் கிரையோஜெனிக் எஞ்சின் தொகுதிகளை உற்பத்தி செய்வதற்கான வசதியை அமைப்பதற்காக ISROஉடன் HAL ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

**3. மாநிலத்தின், 'பழங்குடியினரின் கலைக்களஞ்சியத்தை' வெளியிட்டுள்ள மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம்

ஆ. ஜார்கண்ட்

**இ. ஒடிசா ☑**

ஈ. மேற்கு வங்கம்



✓ ஒடிசா மாநிலத்தில், 'பழங்குடியினரின் கலைக்களஞ்சியத்தை' ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் வெளியிட்டார். இந்தக் கலைக்களஞ்சியத்தின் ஐந்து தொகுதிகள், பட்டியலினத்தோர் (SC) மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCSTRTI) மற்றும் ஒடிசா மாநில பழங்குடி அருங்காட்சியகம் ஆகியவற்றால் வெளியிடப்பட்டது. 3800 பக்கங்கள் மற்றும் 418 ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்ட இத்திருத்தப்பட்ட தொகுதிகளில், அனைத்து 62 பழங்குடி சமூகங்கள் மற்றும் 13 குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி குழுக்களைப்பற்றி உள்ளது. இந்த நூல் கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஒரு களஞ்சியமாக இருக்கும்.

**4. அண்மையில், 2022 டிசம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்ட, 'PMGKAY' என்றால் என்ன?**

அ. உடல்நலக் காப்பீட்டுத் திட்டம்

**ஆ. இலவச உணவு தானியங்கள் திட்டம் ☑**

இ. MSME மானியத் திட்டம்

ஈ. இலவச LPG எரிவாயு உருளை திட்டம்



- ✓ வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கான (BPL) இலவச உணவு–தானியத் திட்டத்தை 2022 டிசம்பர்.31 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்க நடுவணரசு முடிவுசெய்துள்ளது. இது பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனாவின் (PMGKAY) ஏழாம் கட்டமாகும். இதனால் நடுவணரசுக்கு கூடுதலாக ₹44,762 கோடி செலவாகும்.

**5. இந்தியாவின் முதல் எண்ம கல்வியறிவுபெற்ற பஞ்சாயத்தான, 'புல்லம்பாறை' அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளம் ☑**

இ. தெலுங்கானா

ஈ. பஞ்சாப்

- ✓ திருவனந்தபுரத்தில் உள்ள 'புல்லம்பாறை' என்னும் சிற்றூர் கேரளாவின் முதல் டிஜிட்டல் கல்வியறிவுபெற்ற கிராமப் பஞ்சாயத்தாக ஆனது. புல்லம்பாறையில் உள்ளோர் அனைவரும் முழு டிஜிட்டல் கல்வியறிவைப்பெற்றதை அடுத்து டிஜிட்டல் கல்வியறிவுபெற்ற நாட்டின் முதல் கிராமப்பஞ்சாயத்தாக அது ஆனது. அப்பஞ்சாயத்தில் உள்ள சமூகத்தின் மிகவும் பின்தங்கிய பிரிவினருக்கு டிஜிட்டல் கல்வியை வழங்குவதற்காக, 'டிஜி புல்லம்பாறை' திட்டம் 2021 ஆக.15 அன்று தொடங்கப்பட்டது. கல்லூரிகள், குடும்பஸ்ரீ பிரிவுகள் மற்றும் பிற சுயவுதவி குழுக்களின் தன்னார்வலர்களின் உதவியுடன் இது நடத்தப்பட்டது.

**6. 2022இல் வரும், உலக தற்கொலைத் தடுப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




அ. செப்டம்பர்.05

**ஆ. செப்டம்பர்.10 ☑**

இ. செப்டம்பர்.15

ஈ. செப்டம்பர்.20

- ✓ உலக தற்கொலை தடுப்பு நாள் செப்.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி, ஓர் ஆண்டுக்கு 703,000 பேர் உலகம் முழுவதும் தங்கள் இன்னுயிரை மாய்த்துக்கொள்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையிலான உலக தற்கொலைத் தடுப்பு நாளுக்கான முப்பெரும் கருப்பொருளாக, "Creating Hope through Action" என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள், அரசு மற்றும் பொதுமக்களிடையே தற்கொலைகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

**7. 2022ஆம் ஆண்டில் இரண்டாவது இந்தியா–ஜப்பான் 2+2 பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?**



அ. புது தில்லி

**ஆ. டோக்கியோ ☑**

இ. காந்தி நகர்

ஈ. ஒசாகா

- ✓ இரண்டாவது இந்தியா–ஜப்பான் 2+2 பேச்சுவார்த்தையானது அண்மையில் டோக்கியோவில் நடைபெற்றது. இதில், பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் Dr ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இரு நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கும் அதேவேளையில், இந்தியா–ஜப்பான் உறவுகளை மிகவும் வலுவானதாக மாற்றுவதற்கான தங்கள் தீர்மானத்தை இருதரப்பும் மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டன.


**8.** 'Prevention and Management of Osteoarthritis' **என்பது செப்.8 அன்று கடைப்பிடிக்கப்பட்ட எந்த நாளின் கருப்பொருளாகும்?**

அ. உலக ஆயுஷ் நாள்

**ஆ. உலக பிசியோதெரபி நாள் ☑**

இ. உலக எலும்புநல நாள்

ஈ. உலக எலும்பியல் நாள்




- ✓ 1996ஆம் ஆண்டு செப்.8ஆம் தேதி முதன்முதலாக உலக பிசியோதெரபி நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1951ஆம் ஆண்டு இந்நாளில் உலக பிசியோதெரபி நிறுவப்பட்டது. இந்த நாள் பிசியோதெரபி சமூகங்களின் ஒற்றுமை மற்றும் கூட்டாண்மையை மதிக்கிறது. "Prevention & Management of Osteoarthritis" என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

**9. மனித உரிமைகளுக்கான ஐநா உயராணையராக நியமிக்கப்பட்ட வோல்கர் டர்க் சார்ந்த நாடு எது?**

அ. துருக்கி

ஆ. ஆஸ்திரியா

**இ. அமெரிக்கா ☑**

ஈ. ஐக்கிய இராச்சியம்



- ✓ ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகளுக்கான புதிய உயராணையராக ஆஸ்திரிய தூதர் வோல்கர் டர்க் நியமிக்கப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஒப்புதல் அளித்துள்ளது. அவர் முன்னாள் உயர் ஆணையர் மைக்கேல் பச்லெட்டுக்குப் பதிலாக இப்பதவிக்கு வந்துள்ளார். வோல்கர் டர்க், மலேசியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு, குவைத் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ஐநா அகதிகள் அமைப்பில் பணியாற்றியுள்ளார்.

**10. மினிட்மேன் III என்ற கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்த நாடு எது?**

அ. ஜப்பான்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. இஸ்ரேல்

ஈ. பிரான்ஸ்



- ✓ கலிபோர்னியாவில் அமைந்துள்ள வாண்டன்பெர்க் விண்வெளிப்படைத்தளத்திலிருந்து அமெரிக்க வான்படையின் ஆயுதமேந்தாத, 'மினிட்மேன் III' என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதனை செய்தது. ICBM சோதனை ஏவுதல் திட்டத்தின் நோக்கம் அமெரிக்க அணுவாற்றல் படைகளின் தயார்நிலையை நிரூபிப்பதாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முப்படைகளின் தலைமைத் தளபதியாக அனில் சௌஹான் நியமனம்**

முப்படைகளின் தலைமைத்தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் அனில் சௌஹான் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நாட்டின் இராணுவ விவகாரத்துறை செயலாளராகவும் அனில் சௌஹான் பொறுப்பு வகிப்பார் எனவும் நடுவணரசு குறிப்பிட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிரிவுக்கு தளபதியாக இருந்த அனுபவம்கொண்ட அனில் சௌஹான், ஜம்மு – காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்களில் பதற்றமான சூழல்களில் திறம்பட பணியாற்றிய அனுபவம் கொண்டவர். சுமார் 40 ஆண்டுகள் வரை இராணுவத்தில் பணியாற்றி லெப்டினென்ட் ஜெனரலாக அனில் சௌஹான் ஓய்வுபெற்றவர். முப்படைகளின் தலைமைத் தளபதியாக இருந்த பிபின் இராவத் நீலகிரியில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து தற்போது புதிய தலைமைத்தளபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**2. புதிய அட்டர்னி ஜெனரல் ஆர் வெங்கடரமணி**

இந்தியாவின் புதிய அட்டர்னி ஜெனரலாக மூத்த வழக்குரைஞர் ஆர் வெங்கடரமணி நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய அட்டர்னி ஜெனரல் கே கே வேணுகோபாலின் பதவிக்காலம் வரும் 30 அன்று நிறைவடையவுள்ள நிலையில், புதிய அட்டர்னி ஜெனரலாக ஆர் வெங்கடரமணியை நியமித்து குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டார். இவர் பதவியேற்கும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு நடுவணரசின் அட்டர்னி ஜெனரலாக பதவி வகிப்பார்.

---

**3. இளம் வல்லுநர்களுக்கான புத்தாய்வுத் திட்டம்: முதல்வர் தொடக்கிவைத்தார்**

இளம் வல்லுநர்களுக்கான ஈராண்டு புத்தாய்வுத்திட்டத்தினை முதல்வர் முக ஸ்டாலின் இன்று தொடக்கிவைத்தார். இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசு தனது அனைத்துத் துறைகளிலும் சிறந்த நல்லாட்சியை வழங்கிட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியின் ஒருபகுதியாக, தமிழ்நாடு அரசு ஈராண்டுகால, "தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத்திட்டத்தை (2022–2024)" அறிமுகப்படுத்தியுள்ளது. திறன்மிகு இளைஞர்களின் ஆற்றலையும், திறமையையும் பயன்படுத்தி, நிர்வாகச்செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் சேவை வழங்கலை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இப்புத்தாய்வுத் திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்டு பயிற்சியில் கலந்துகொள்ளும் இளம் வல்லுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ₹65,000/– மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கான பயணச்செலவு, கைப்பேசி மற்றும் தரவு பயன்பாடுபோன்ற செலவினத்திற்காக மாதம் ₹10,000/– கூடுதல் தொகையாக வழங்கப்படும்.

ஈராண்டு புத்தாய்வுத் திட்டத்தை திருப்திகரமாக நிறைவுசெய்யும் வல்லுநர்களுக்கு, பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனம் பொதுக்கொள்கை மற்றும் மேலாண்மையில் முதுகலை சான்றிதழ் (Post Graduate Certificate in Public Policy and Management) வழங்கும். இதுதவிர, ஏற்கனவே முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு குறைந்தபட்ச தகுதித்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின்மூலம் முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு வாய்ப்பும் வழங்கப்படும்.

---

**4. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் அதிகரிப்பு**

நடப்பு 2022–23ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத்திட்டம் உள்ளிட்ட சில சிறுசேமிப்புத்திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை நடுவணரசு உயர்த்தியுள்ளது. நடப்பு நிதியாண்டுக்கான அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்றாவது காலாண்டில் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் தொடர்பான விவரங்களை நடுவண் நிதியமைச்சகம் வெளியிட்டது.

அதன்படி, சில சிறுசேமிப்புத்திட்டங்களுக்கான வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத்திட்டத்துக்குரிய வட்டி விகிதம் 7.4 சதவீதத்தில் இருந்து 7.6 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அஞ்சல் நிலைய 3 ஆண்டுகால வைப்புத்தொகைக்கான வட்டி விகிதம் 5.5 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதமாகவும், ஈராண்டு கால வைப்புத்தொகைக்கான வட்டி விகிதம் 5.5 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

வருங்கால வைப்புநிதித்திட்டம் (7.1%), தேசிய சேமிப்புத்திட்டம் (6.8%), ஓராண்டு கால வைப்புத்தொகைத்திட்டம் (5.5 சதவீதம்), பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத்திட்டம் (7.6 சதவீதம்) ஆகியவற்றுக்கான வட்டி விகிதத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

**கடன் இலக்கு குறைப்பு:** நடுவணரசின் வரி வருவாய் அதிகரித்துள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் கடன் வாங்குவதற்கான இலக்கைச் சுமார் ₹10,000 கோடி வரை அரசு குறைத்துள்ளது. அக்டோபர் மாதம் முதல் மார்ச் வரையிலான 2ஆவது அரையாண்டில் சந்தையில் இருந்து ₹5.92 லட்சம் கோடி கடன்பெறவுள்ளதாக நடுவணரசு அறிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்தமாக ₹14.31 இலட்சம் கோடி கடன்பெறவுள்ளதாக பட்ஜெட்டில் நடுவணரசு அறிவித்திருந்தது. அதை தற்போது ₹14.21 இலட்சம் கோடியாக நடுவணரசு குறைத்துள்ளது.

கடந்த 17ஆம் தேதி வரை நடுவணரசின் நேரடி வரி வருவாய் 30 சதவீதம் அதிகரித்து ₹8.36 இலட்சம் கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.